Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 16 சனிக்கிழமை (30.05.2015) பக்கங்கள் 20 ஓசை – 242

# காணாமற்போனோர் விசாரணை மீளாய்வு செய்ய ஏற்பாடு



## ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

யுத்தகாலத்தில் காணாமற்போன ஊடகவியலாளர்கள் உட்பட அனைவரது விசாரணைகள் அனைத்தும் மீளாய்வு செய்யப்பட்டு தொடர் விசாரணைகளையும் துரிதமாக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

கடந்த யுத்தகாலத்தில் காணாமற் போகச் செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் பொது மக்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பான ஆவணங்கள் மீளாய்வு செய்து, விசாரணைகளை விரைவுபடுத்தி, நீதி நிலைநாட்டப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

கொழும்பு சட்டத்தரணிகள் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இந்த உறுதியை வழங்கினார்.

நீதிச் சேவையின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்தவும், வலுப்படுத்தவும் புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் இதன்போது கூறினார்.

ஜனாதிபதி செயலகத்திலிருந்தோ அல்லது ஜனாதிபதி மாளிகையில் இருந்தோ புதுக்கடை நீதிமன்றத்திற்கு தொலைபேசி அழைப்புகளும், வேறு அறிவுறுத்தல்களும் இப்போது செல்வதில்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

நீதிச்சேவைகள், சுதந்திரம், ஜனநாயகம் என்பன மரித்துப் போயிருந்த இந்நாட்டில் அவற்றை உயிர்ப்பித்து மீள எழுப்புவதற்கு 24 மணிநேரம் போதாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவற்றை கட்டியெழுப்புவதற்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## இலங்கை மீனவர்கள் ஐவர் கைது

இந்தியக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய கடலோர காவல் படையினர் கோடியக்கரைக்கு தென் கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த வேளை,

19 ஆம் பக்கம் பார்க்க

## டி.என்.ஏ. அறிக்கைக்காக காத்திருப்பு

வித்தியா கொலை வழக்கு

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பிலான பொலிஸாரின் விசாரணை நிறைவடைந்துள்ளதாகவும் கைதுசெய்யப்பட்ட 9 பேரினதும் மரபணுப் பரிசோதனை அறிக்கைக்காக தாம் காத்திருப்பதாக வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் விசாரணைகள் நிறைவுபெற்றுள்ளன. ஆனாலும் விசேடமாக நியமிக்கப்பட்ட புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகள் இடம்பெறுவதுடன், 9 பேரினதும் இரத்த மரபணுப் பரிசோதனை அறிக்கை இன்னமும் கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அது கிடைத்ததும் நீதிமன்றில் பாரப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ,25)

## நோர்வே நிபுணர் குழு யாழ்ப்பாணத்தில் ஆய்வு

கழிவு ஓயில் கலப்பு விவகாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரில் கழிவு ஓயில் கலப்பு விவகாரம் தொடர்பாக நோர்வேயின் நிபுணர் குழு தனது ஆய்வு நடவடிக்கையை மும்முரமாக மேற்கொண்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக இலங்கைக்கான நோர்வே தூதுவர் கிறீற் லோகீன் தலைமையில் நோர்வே நீரியல் நிபுணர்கள் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனை அவரது அலுவலகத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

வடமாகாண சபையால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அழைப்பின் பேரில், இலங்கை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அண்மையில் சுன்னாகம் பகுதியில் தரையை ஊடுருவும் றேடாரைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது. இதற்கான அனுசரணையை நோர்வே வழங்கியிருந்தது. இதன் அடுத்த கட்ட ஆய்வுக்காகவே நோர்வே புவிச்சரிதவியல் நிறுவகத்தைச்

19 ஆம் பக்கம் பார்க்க

## தீவகத்தில் பொலிஸ் நிலையம் காணி தேடுகிறது பொலிஸ் திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதிகளில் பொலிஸ் நிலையம் அமைக்க ஒரு ஏக்கர் நிலம் பொது மக்களால் முன்வந்து வழங்கப்படுமேயானால் அங்கு பொலிஸ் நிலையம் அமைத்து மக்களுக்கான சேவை வழங்க நாம் தயாராக இருப்பதாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ.ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போது ஊர்காவற்றுறையில் மட்டுமே பொலிஸ் நிலையம் இருப்பதால் நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு, காரைநகர் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் அங்கு படகுகளில் செல்ல வேண்டிய நிலை கூட இருக்கின்றது.

எனவே இவ்வாறான தீவகப்பகுதிகளில் ஒரு ஏக்கர் அளவில் நிலத்தை மக்கள் முன்வந்து எமக்கு வழங்கினால் பொலிஸ்

19 ஆம் பக்கம் பார்க்க

## மேலதிக பொலிஸ் நிலையம் தீவகத்தில் அமைக்க வேண்டும்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போதுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு மேலதிகமாக புங்குடுதீவு, காரைநகர் மற்றும் மாதகல் போன்ற பகுதிகளில் புதிய பொலிஸ நிலையங்கள் அமைக்கப்படுவதன் அவசியத்தை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா சட்டம் மற்றும் ஒழுங்கு விவகாரங்களுக்கான அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் அவதானத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், தீவகப்

19 ஆம் பக்கம் பார்க்க

## மேலும் ஐந்து புதிய அமைச்சர்கள்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தில் மேலும் ஐவர் அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்றுள்ளனர்.

லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும், பண்டு பண்டாரநாயக்க, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஹேமால் குணசேகர ஆகியோர் இராஜாங்க அமைச்சர்களாகவும் சந்திரசிறி சூரியாராச்சி பிரதி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன - நாடாளுமன்ற நடவடிக்கை

19 ஆம் பக்கம் பார்க்க

## சிறுமி சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கோரக்கண்கட்டு குடியிருப்புப் பகுதியில் நேற்று மாலை சிறுமியொருவரின் சடலம் கிணற்றிலிருந்து கண்டெடுக்கப் பட்டுள்ளது.

இராசையா கமலேஸ்வரி என்ற 12

19 ஆம் பக்கம் பார்க்க



### ரணில் மீது பிரேரணை துணிந்து விட்டாரா மைத்திரி



பக் - 06

# புதிய அதிபரை இடமாற்றக்கோரி மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு

(முல்லைத்தீவு)

புதிதாக நியமிக்கப்பட்ட அதிபரை உடனடியாக வேறு பாடசாலைக்கு இடமாற்றம் செய்ய வேண்டும் எனக் கோரி முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் நேற்று வகுப்பு பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

குறித்த பாடசாலையில் முன்னர் கடமையாற்றிய அதிபர் ஓய்வு பெற்றுச் சென்றமையை அடுத்து ஆசிரியர் ஒருவர் தற்காலிக அடிப்படையில் அந்தப் பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு தற்காலிக அடிப்படையில் கடந்த இரு மாதங்களாக அதிபர் நியமிக்கப்பட்ட நிலையில், கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் குறித்த பாடசாலைக்கு நிரந்தர அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் நியமிக்கப்பட்ட அதிபர் இந்தப்பாடசாலையில் கடமையாற்றக் கூடாது எனவும் அவரை உடனடியாக இடமாற்றுமாறும் பெற்றோர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன், உரிய அதிகாரிகளுக்கு மகஜர் மூலம் தெரியப்படுத்தியுள்ளனர்.

எனினும் தமது கோரிக்கைகளுக்கு எதுவிதமான பதிலும் கிடைக்கவில்லை என்பதையடுத்து நேற்றுக் காலை பாடசாலை நுழைவாயிலை அடைத்து மாணவர்கள் வீதியை மறித்து



பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் சுமார் மூன்று மணி நேரம் மாணவர்கள் வீதியிலேயே இருந்துள்ளனர். இதனையடுத்து அந்த இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு கோட்டக்கல்வி அதிகாரி ஈ.எஸ். பரமேஸ்வரன் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள், பெற்றோர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது தமது பக்க நியாயங்களை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர்கள் உள்ளிட்டவர்கள் கோட்டக்கல்வி அதிகாரியிடம் தெரிவித்தனர். இதுகுறித்து தான் அவதானம் செலுத்துவதுடன், இந்தப்பிரச்சினை தொடர்பில் வரும் வெள்ளிக்கிழமை 5 ஆம் திகதி வரை அவகாசம் வழங்குமாறும் உத்தரவாதம் அளித்ததையடுத்து குறித்த பகிஷ்கரிப்பு நடவடிக்கையை தற்காலிகமாக கைவிட்டுள்ளதுடன், கல்வி நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பின. (165)

# நோர்வே தூதுவர் அரச அதிபருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான நோர்வே உயர்ஸ்தானிகர் கிறேட் லோசன் யாழிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று மேற்கொண்ட இந்த விஜயத்தின் போது, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனை மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

அந்த சந்திப்பின் போது, வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் பலாலி விமான நிலையங்கள் குறித்து அரச அதிபரிடம் கேள்வி எழுப்பியதுடன், வலி.வடக்கு வரைபடத்தினையும் பார்வையிட்டார்.

அதன்பின்னர் மாலை 3.00 மணிக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்தித்து கலந்துரையாடியமையும் குறிப்பிடத்தக்கது. (25)

# வித்தியாவின் கொலையாளிகளுக்கு முதலில் உச்ச தண்டனை வேண்டும்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் மீளவும் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் கற்பு கோரமாகச் சூறையாடப்பட்டு, கொடூரமாகக் கொலை செய்யப்பட்டமை உலகம் முழுவதையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. இக்கொடூரத்தைப் புரிந்தவர்களுக்கு வெகுவிரைவாக உச்ச தண்டனை வழங்கப்பட வேண்டுமென்பது இன, மத வேறுபாடின்றி ஒட்டுமொத்தமாக எல்லோரின் கோரிக்கையாகும்.

இதனை உணர்ந்த ஜனாதிபதி யாழ்ப்பாணம் விஜயம் செய்து பல உறுதி மொழிகளை வழங்கி, விசேட நீதிபதி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்தது பாராட்டுக்குரிய விடயமே.

ஆனால் இதனைத் திசை திருப்பும் விதத்தில் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதனை நாம் அனுமதிக்க முடியாது என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான ஊடக அறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வித்தியாவின் கொலையாளிகளுக்கு முதலில் விரைவாக தண்டனை வழங்க வேண்டும். என்பது எமது அவசரமான கோரிக்கை. அதனை விடுத்து கடந்துபோன காலங்களில் நடைபெற்ற அத்தனை சம்பவங்களையும் வித்தியாவின் கொலையோடு சேர்த்து தீர்ப்பு வழங்கக்கோருவது முட்டாள்தனமானது. காரணம் வலுவிழந்த பல வழக்குகள் உள்ளன. வழக்குகள் முடிவடைந்த சம்பவங்கள் பல உள்ளன. குற்றவாளிகள் கண்டறியப்படாத சம்பவங்கள் பல உள்ளன. அவற்றையெல்லாம் வித்தியாவின் கொலையோடு சேர்த்து நீதி வழங்கக்கோரினால் ஏனைய வழக்குகளைப் போல இதுவும் மறைந்துவிடும்.

ஆகையால் வித்தியாவின் கொலையாளிகளுக்கு முதலில் உச்ச தண்டனை வழங்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டு நிற்கின்றோம். இதனையே ஜனாதிபதியைச் சந்தித்த மாணவ சமூகமும், கல்விச்சமூகமும் கோரி நிற்கின்றது.

இந்த விடயத்தை திசை திருப்ப யாரும் முனையக் கூடாது என்பதனையும் வலியுறுத்துகின்றோம்.

எம்மால் மோற்கொள்ளப்பட்ட அகிம்சைவழி போராட்டத்திற்கு தற்போதைய அரசு மதிப்பளித்துள்ளதை நாம் வரவேற்கின்றோம். அதில் ஆளுநர் உள்ளிட்ட எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்பதனை நாம் உணருகின்றோம்.

நாம் முன்னெடுத்த அகிம்சை வழிப் போராட்டத்தை குழப்புவதற்கு பல வழிகளிலும் சிலரால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதனையும் நாம் அறிவோம். இது எம்மால் முன்னெடுக்கப்பட்ட அடையாளமான போராட்டம் மட்டுமே. அறவழிப் போராட்டத்தில் நாம் இன்னும் நம்பிக்கை வைத்துள்ளோம்.

தயவு செய்து வித்தியாவின் மரணத்திற்காக மனிதர்களாகிய நாம் வெட்கித்தலைகுனிந்து, வேதனையுடன் உள்ள வேளை, இவ்விடயத்தை விளம்பரமாகவும், விளையாட்டாகவும் எவரும் எடுக்கவேண்டாம் என கேட்டுக்கொள்வதோடு, வன்முறைகளில் எவரும் ஈடுபட வேண்டாம் எனவும் கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுபான விற்பனை நிலையங்களுக்கு அனுமதி வழங்குவதை தவிருங்கள்

## வலி.கிழக்கு எதிர்க்கட்சித்தலைவர் கோரிக்கை



(கோப்பாய்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக மதுபான விற்பனை நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது தவிர்க்கப்படவேண்டுமென்ற பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரின் பிரேரணை நேற்றையதினம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

நேற்றையதினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர் ஐங்கரன்,

புங்குடுதீவு மாணவியின் கொலையை வன்மையாகக் கண்டித்தார். அத்துடன், வித்தியாவை கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி படுகொலை செய்தவர்கள் மதுபானம் அருந்தி நிதானம் அற்ற நிலையிலே தாங்கள் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றவாளிகள் கூறியிருப்பதாக செய்திகள் தெரிவித்திருக்கின்றன.

எனவே யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற அனைத்து சம்புவங்களிலும் ஈடுபட்டவர்கள் மதுபானம் அருந்திவிட்டு நிதானம் அற்ற நிலையிலே கொலை, கொள்ளை, பாலியல் வன்புணர்வு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என செய்திகள் வெளிவருகின்றன.

அதேவேளை இன்றைய எங்களுடைய எதிர்கால இளைய சமூகத்தினர் மதுபானத்திற்கும், போதைப்பொருளிற்கும் அடிமைகளாகின்ற நிலைமை தற்பொழுது எமது மாவட்டத்தில் அதிகளவாகக் காணப்படுகின்றது.

எனவே எதிர்காலத்தில் எமது வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் மதுபான விற்பனை நிலையங்களிற்கு அனுமதி வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும். அதேவேளை ஏற்கனவே எமது வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் அரச திணைக்களங்கள், பாடசாலைகள், ஆலயங்கள், வைத்தியசாலைகள், மக்கள் அதிகளவாக ஒன்று கூடுகின்ற பொது இடங்கள் என்பனவற்றுக்கு அருகாமையில் அனுமதி வழங்கப்பட்ட மதுபான விற்பனை நிலையங்கள் இருக்கின்றன அவ்வாறான மதுபான விற்பனை நிலையங்களிற்கு அனுமதி வழங்கும் பொழுது மக்களுடைய கருத்துக்களை செவிமடுக்காது தங்களுடைய சுயலாபத்திற்காகவே அனுமதி வழங்கி இருக்கின்றார்கள். என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

ஆகவே இவ்வாறான மதுபான விற்பனை நிலையங்களை மக்களிற்கு இடையூறு இல்லாத இடங்களிற்கு மாற்றப்பட வேண்டும். என்பதுடன் எமது வலிகாமம் கிழக்கு பிரதேசத்திலே பராமரிப்பற்ற நிலையில் காணப்படும் அரச கட்டடங்கள், அரச காணிகள், தனியார் கட்டடங்கள், தனியார் காணிகள், பொது மக்களுடைய காணிகள், பொது மக்களுடைய வீடுகள், பராமரிப்பற்ற நிலையில் புல், பூண்டுகளாக காணப்படுகின்றது. அவ்வாறான இடங்களில்தான் இவ்வாறான கலாசார சீரழிவுகள் அதிகளவில் காணப்படுகின்றது.

ஆகவே அதனை அகற்றுவதற்கு பிரதேச சபை, சுகாதார பணிமனை, பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து நடவடிக்கையினை மேற்கொள்வதுடன், இவ்வாறான இடங்களை இனங்கண்டு காணிகள், கட்டடங்களின் உரிமையாளர்களிடம், அல்லது அதனைப் பராமரிப்பவர்களுக்கு கிராம உத்தியோகத்தர் ஊடாக தெரியப்படுத்தி சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மதுபானம் அருந்துபவர்கள் மாலை நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களிற்கு செல்லும் மாணவர்களிற்கு இடையூறு விளைவிப்பவர்கள் மீது பொலிஸார் வீதி ரோந்தில் ஈடுபட்டு அவர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை சபையில் தீர்மானமாக நிறைவேற்றி அதற்கான நடவடிக்கையினை எடுக்குமாறு சபையின் தவிசாளரை கேட்டுக் கொண்டார்.

அவரது இந்தத் தீர்மானத்தை உப தவிசாளர் கந்தையா தர்மலிங்கம் முன்மொழிய உறுப்பினர் நாகமணி இராசநாயகம் வழிமொழிய சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# வெளியாகியது வெளிவாரி பெறுபேறு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் அலகினால் நடாத்தப்பட்ட கலைமுதற்தேர்வு - 2011 மற்றும் கலைமாணி பகுதி - I-2011 தேர்வுகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த 27 ஆம் திகதி புதன்கிழமை வெளியாகியுள்ளன.

01.06.2015 திங்கட்கிழமை தொடக்கம் பரீட்சார்த்திகள் தமது பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், மீள் பரீட்சார்த்திகள் உடனடியாக மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

# தாமதமாகும் பொதுத் தேர்தலானது நல்லாட்சிக்கு குந்தகமாக உள்ளது

## business-standard தளத்தில் Aditi Phadnis எழுதியுள்ள கட்டுரையிலிருந்து

இந்தியாவில் நரேந்திர மோடி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்கு வந்து ஓராண்டு ஆகியுள்ள நிலையில், இது தனது அயல்நாடுகள் தொடர்பில் அதிகளவில் அக்கறை செலுத்தவில்லை எனக் கூறப்படுகிறது. ஆனால் இலங்கையில் நடைபெறும் தற்போதைய அரசியல் மாற்றங்கள் இதற்கு மாறுபட்டதாகக் காணப்படுகிறது.


மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இலங்கையின் கூட்டணி அரசாங்கம் ஏப்ரல் 29, 2015 இல் நிறைவேற்று அதிகார முறைமையை ஒழித்ததன் மூலம், ஜனவரி 2015 இல் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் இந்த அரசாங்கத்தால் வாக்குறுதியளிக்கப்பட்ட ஆட்சிச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள முடிந்திருக்கிறது.

எனினும், இலங்கை அரசாங்கமானது ஏப்ரலில் பொதுத்தேர்தல் நடாத்தப்படும் என அறிவித்த போதும் அதனை குறித்த காலப்பகுதிக்குள் மேற்கொள்ளத் தவறியுள்ளது.

அரசாங்கத்தின் பெரும்பாலான அதிகாரத்தையும் நிர்வாகத் தீர்மானத்தையும் பெருமளவில் எடுக்கக்கூடிய பிரதமர் மற்றும் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமே எதிர்காலத்தில் தெரிவுசெய்யப்படுவர்.

இந்நிலையில் இலங்கை அரசாங்கமானது பொதுத்தேர்தலை மேற்கொள்வதற்கான திகதியை அறிவிக்காது இழுத்தடிப்பதானது யார் வெற்றி பெறுவார்கள் என்கின்ற சிக்கலைத் தோற்றுவித்துள்ளது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முரண்பாடான நிலையே பொதுத் தேர்தலுக்கான திகதிகளை அறிவிப்பதற்குத் தடையாக உள்ளது.

முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலம் முடிவடைவதற்கு இரண்டு ஆண்டுகள் முன்னரே ஜனாதிபதி தேர்தலை நடத்தவுள்ளதாக அறிவித்த வேளையில், ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட உறுப்பினராக மைத்திரிபால சிறிசேன விளங்கினார்.





இவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு சாராரால் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கான ஆதரவு வழங்கப்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவால் தலைமை தாங்கப்படும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மைத்திரிபால சிறிசேன தேர்தலில் களமிறங்கியிருந்தார்.

சிறிலங்காவின் அரசியலில் ஒரு அதிரடித் திருப்புமுனையாக எதிர்க்கட்சி அரசாங்கத்திலும், அரசாங்கம் எதிர்க் கட்சியிலும் அங்கம் வகிக்கும் நிலை உருவாகியது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி – ஐக்கிய தேசியக் கட்சி கூட்டணி அரசாங்கமானது 100 நாள் வேலைத்திட்டம் ஒன்றை அறிவித்தது. இதன்மூலம் நிறைவேற்று அதிகார முறைமை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தியாவின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியும் இவ்வாறானதொரு பொதுவான வேலைத்திட்டத்தை 2004 இல் ஆரம்பித்திருந்தது. இதன்மூலம் இடதுசாரிக் கட்சிகளுடன் உறவை நெருக்கமாக்கிக் கொள்வதே இதன் நோக்காகும்.

இதன் மூலம் பாரதிய ஜனதாக் கட்சியை அரசாங்கத்திற்குள் நெருங்கவிடாது தடுப்பதே நோக்காகக் கொள்ளப்பட்டது.

இலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி போன்றன பொதுத்தேர்தலை நடத்துவதற்கான திகதியை வரையறை செய்யாது தொடர்ந்தும் தமக்கு ஆகக்கூடிய நலன்களைப் பெற்றுக் கொள்வதற்காக தமக்கிடையில் மோதிக் கொள்கின்றன.

கடந்த வாரம் ராஜபக்ஷவுக்கு ஆதரவான நான்கு அமைச்சர்கள் அரசாங்கத்திலிருந்து விலகினர். இவ்வாறான காரணிகள் சிறிசேனவுக்கு நெருக்கடியை ஏற்படுத்துமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தாமதமாகும் தேர்தலானது நல்லாட்சிக்கு குந்தகம் விளைவித்துள்ளது.

சிறிசேன பதவிக்கு வந்த பின்னர், தென்னாசிய நாடான இலங்கையில் சீனா தனது சொந்த நோக்குடன் துறைமுக நகர அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு புதிய அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

சீனா தென்கிழக்காசியா, மத்திய ஆசியா, ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பா முழுவதிலும் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் வர்த்தகத்தைத் துரிதப்படுத்துவதற்கான மூலோபாயத்தின் விளைவாக 'ஒரு அணை ஒரு தடுப்பு' என்கின்ற புதிய திட்டம் ஒன்றை முன்னெடுக்கிறது.

கொழும்பு துறைமுக நகரத் திட்டத்திற்கு முதற்கட்டமாக 1.5 பில்லியன் டொலர்களும், 1.3 பில்லியன் டொலர்களும் வழங்கப்பட்டுள்ளது. இதுவே சீனாவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள மிகப்பெரிய முதலீடாகக் காணப்படுகிறது.

இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பாக சீனாவின் தனியார் துறையினர் கேள்வியெழுப்புகின்றனர்.

இதேபோன்று இந்தியாவும் இலங்கையின் அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றது. எனினும், தற்போதைய சூழலில், மூலோபாய ரீதியாக நோக்கில் இந்தியா தற்போது தனது பணியைத் தொடராது தொலைவில் நிற்பதாகவே தெரிகிறது.

பொதுத்தேர்தலை நடத்துவதற்கான காலக்கெடுவை சிறிசேன அரசாங்கம் அறிவிக்கவில்லை. ஐ.தே.க வும் நாட்டில் தேர்தல் இடம்பெற வேண்டிய கால அவகாசம் தொடர்பாகக் குறிப்பிடவில்லை. ஆனால் தேர்தலை சிறிலங்கா சுதந்திரக் கட்சி தடுப்பதன் மூலம், இது ஆட்சியில் தொடர்ந்தும் இருக்கும்.

சிறிசேன அரசாங்கம், 2015 செப்ரெம்பருக்கு முதல் தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்புக் குறைவாகவே உள்ளது.

இடைக்கால ஆட்சியில் 20 ஆவது திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜனாதிபதி தலைமையிலான பிரதமர் ஆட்சியை மேற்கொள்வதற்கான சட்டம் வரையறுக்கப்பட வேண்டும்.

அடிப்படை அரசியல் யாப்புவாதத்தின் மூலம் புதிய அரசானது தான் ஆட்சிக்கு வரும்போது எத்தகைய வாக்குறுதிகளை வழங்கியிருந்தது என்பதை மறந்து விட்டுத் தொடர்ந்தும் ஆட்சிப் பீடத்தில் இருக்கவேண்டும் எனக் கருதுகிறது.

# இளம் சமுதாயத்தை பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும்

## கரைச்சி கோட்டக் கல்வி அலுவலர் தெரிவிப்பு



"எங்கள் இளங்குருத்துக்களை பாதுகாப்பது எம் ஒவ்வொருவரதும் தார்மீக பொறுப்பாகும்." என கிளிநொச்சி கரைச்சிக் கோட்டக்கல்வி அலுவலர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்தார். கிளி/இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் பெற்றோர் நாளும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முதல்வர் திருமதி.சூரியகுமாரி இராசேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

இதில் கோட்டக்கல்வி அலுவலர் தனது உரையில் தெரிவித்துள்ளதாவது,

இன்று நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பச்சிளம் சிறார்கள் மீதான பாலியல் பலாத்காரங்கள், வன்முறைகள் என்பது, நாம் எங்கே செல்கிறோம் என்ற கேள்வியை எம்மிடமே கேட்க வைத்துள்ளது. எமது சமுதாயத்தை அழிக்கும் எதிரிகள் எங்களுக்குள்ளேயே இருக்கிறார்கள். எனவே நாம் விழிப்பாக இருக்க வேண்டும் சகல பிள்ளைகள் மீதும் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டும் விடுதலைக்காகப் போராடிய தமிழ் இனம் அழிக்கப்படுவதற்கு, பலவீனப்படுத்துவதற்கு, பலவழிகளில் உருவாக்கப்படுகின்ற வழிகளில் ஒன்று தான் சிறுமிகள் மீதான வன்புணர்வு. ஆகவே எங்களை நாங்களே திடகாத்திரமானவர்களாக, தைரியமானவர்களாக மாற்ற விழிப்பாக இருக்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கரைச்சி கோட்டக்கல்வி அலுவலர் அ.அமிர்தலிங்கம் உலக தரிசனப்பணியாளர் றெஜி, கிருஷ்ணபுரம் கிராம சேவையாளர் செல்வி யசோதா, விவேகானந்தநகர் கிராம சேவையாளர் ம.சந்திரபாலன், அயற்பாடசாலைகளான பாரதி வித்தியாலயம் கனகாம்பிகைகுளம் மகா வித்தியாலயம் அன்னைசாரதா வித்தியாலயம் கனகபுரம் மகா வித்தியாலயம் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம் திருவள்ளுவர் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள், உதவும் உறவுகள் இணைப்பாளர் திருமதி.மு.தினேஷ், பெற்றோர்கள், மாணவர்கள், கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாச பிரதிநிதி ஜீவநாயகம் கிருஷ்ணபுரம் விநாயகபுரம் கிராம அமைப்புக்களின் பிரதி நிதிகள், நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (160)

# கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் வடமராட்சி கிழக்கில் கடும் எதிர்ப்பு

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றிற்கும் தாழையடிக்கும் இடைப்பட்ட கடற் பரப்பில் கடல் நீரை சுத்திகரித்து நன்னீர் ஆக்கும் செயற்றிட்டத்தை வடமாகாணசபை முன்னெடுக்க உள்ள சூழலில் இது தொடர்பான ஆரம்ப கூட்டம் தாழையடி சமாச பொது மண்டபத்தில் இடம்பெற்றபோது வடமாகாண சபையின் விவசாய அமைச்சர் பொன்னுத்துரை. ஐங்கரநேசனிற்கும் பிரதேச பொது அமைப்புக்களுக்குமிடையில் நேற்றுமுன்தினம் கடும் வாக்குவாதங்களும் வாதப் பிரதி வாதங்களும் இடம்பெற்றன.

இதன்போது இப்பகுதி பொது மக்கள் தாங்கள் தண்ணீரை எடுப்பதற்கு ஒருபோதுமே அனுமதிக்கப்போவதில்லை எனவும் எமது பகுதி வளங்களை சுரண்டுவதற்கு முன்னர் இந்தப்பகுதியின் வீதி உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்குமாறு பொது மக்களும் பொது அமைப்புக்களும் வலியுறுத்தினர். அத்துடன் இப்பகுதியில் கடல் நீரை எடுப்பதால் சூழல் மாசடைவதுடன் மீனினங்களும் அழிந்துவிடுமென இப்பகுதி கடற்றொழிலாளர் சங்கங்கள் உறுதியாகத் தெரிவித்தன. இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்துடன் விளையாடி அரசியல் செய்ய வேண்டாமென ஐங்கரநேசனை இப்பகுதி பொது அமைப்புக்கள் கேட்டுக்கொண்டன.

# கற்றல் உபகரணம் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச பிரிவில் தாய் அல்லது தந்தையை இழந்த 75 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் க.பிருந்தாகரன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் யாழ்.நிறுவனத்தின் 1 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் தாய் அல்லது தந்தையை இழந்த 75 மாணவர்களுக்கு கல்வியை ஊக்குவிக்கும் முகமாக கற்றல் உபகரணங்களை பிரதம அதிதியாக கலந்து கொண்ட வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வன் அடைக்கலநாதன் இவ் உபகரணங்களை வழங்கி வைத்துள்ளார். (40)

கோபத்துடன் செயல்படுபவனும், புயலில் கப்பல் விடுபவனும் சரிசமமானவர்கள். - பீச்சர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கூட்டுப் பகை வளர்ப்பு!

தனிநாடு, தன்னாட்சி, யாரும் தலையிட முடியாத் தனியலகு, ஒரு நாட்டுக்குள் இரு தேசம், வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி.... இந்த மாதிரி ஏதோ ஒரு தீர்வுதான் தமிழ் மக்களுக்குக் கிடைக்கப் போகிறது என்று, இன்று உண்மையிலேயே நம்பிக் கொண்டிருப்பவர்கள் யார் யாராக இருப்பார்கள்?

அவர்கள் ஒன்றில், யாரும் எது சொன்னாலும் அப்படியே நம்பிவிடக் கூடிய அப்பிராணிகளாக இருக்க வேண்டும் அல்லது திட்டமிட்டு ஏமாற்றுபவர்களாக இருக்க வேண்டும்.

இன்றைய உலக சூழலில், தனது மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ் மாநிலத்தையும் கொண்டிருக்கும் இந்திய நாட்டுக்கு மிக அருகாமையில் இருந்துகொண்டு, நம்மால் அப்படி ஒரு தீர்வை எடுத்துவிடக் கூடும் என்று முட்டாள்தன மனக்கணக்குடன் யாரேனும் இருப்பார்கள் என்பது நம்பக்கூடியதாக இருக்கிறதா?

யாரும் அதை நம்பவில்லை என்பதால்தான், "இன்றைய உலகச் சமன்பாடு ஒரு பெரிய மாறுதலுக்கு உள்ளாகும். அப்போது இந்த நாட்டில் மற்றைய சமூகங்கள் விரும்பாவிட்டாலும் அவர்களைப் புறக்கணித்துவிட்டு நாம் விரும்பும் தீர்வை எடுத்துவிட முடியும்" என்று காத்திருக்கும்படியே சொல்ல முடிகிறது.

அப்படி இந்தியாவுக்கும் சீனாவுக்கும் உலக நாடுகளுக்கும் முறுகல்நிலை முற்றி, அவர்களில் யாருக்கேனும் ஈழத்தமிழர்களாகிய நாங்கள் தேவைப்படும் காலம் வரும், அதுவரை காத்திருக்கலாம் என்று காத்துக் கொண்டிருப்பவர்கள் எப்படியானவர்களாக இருப்பார்கள்?

இந்த நாட்டிலுள்ள தமிழர்களாகிய நம்மைத் தவிர, மற்றைய மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக நீதியுணர்வு இல்லாதவர்கள்; அவர்களெல்லாம் தமிழர்களை ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர்கள் என்ற அசைக்கமுடியா எண்ணத்தில் இருப்பவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

இன்னொரு சமூகமே ஒட்டுமொத்தமாகச் சரியானதில்லை; அந்த சமூகத்திலுள்ள யாருக்கும் நமது நியாயத்தை விளங்கப்படுத்த முடியாது; அந்த சமூகமே மொத்தமாக நமது வெறுப்புக்குரியதுதான் என்ற சிந்தனை பாசிசத்தின் கூறுகளைக் கொண்டதல்லவா?

பெரும்பான்மைத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் தமிழ்த் தலைவர்களும் எழுத்தாளர்களும் ஆய்வாளர்களும் சிங்களப் பொதுமக்களிடம் தமிழ்ப் பிரச்சினை பற்றி என்னவிதமான பார்வையை உருவாக்க முயற்சித்திருக்கிறார்கள் என்று பார்த்து, அங்கிருந்தல்லவா நமது நியாயத்தன்மை உயிர்கொள்ளும்?

தமிழ்த் தலைமைகள் இனவாதத்துடன் செயற்பட்டதை, செயற்பட்டுக் கொண்டிருப்பதை மறைத்துவிட்டு, சிங்களத் தலைமைகள் இனவாதத்துடன் செயற்படுகின்றன எனவே இந்த நாட்டை வெளிநாடுகளிடம் காட்டிக் கொடுப்பதில் தப்பில்லை என்று செயற்படுவதுதான் நாம் நல்லிணக்கத்துக்காக முயற்சிக்கும் அழகா?

எங்களுடைய துன்பங்களுக்காகவும் பிரச்சினைகளுக்காகவும் உலகமே எங்களுக்காக நிற்கவேண்டும் என்று எதிர்பார்க்கும் நாம், வேறெந்த சமூகத்தினரதும் எந்தவொரு பிரச்சினைக்காகவும் குரல்கொடுத்து அவர்களுக்காகக் கரங்கோர்க்க நினைப்பதுண்டா?

சிங்கள அரசாங்கம் எப்படி நடக்க வேண்டும், இந்திய அரசு நம் பிரச்சினையில் அலட்சியமாக நடந்துகொள்வது எவ்வளவு பிழை, அமெரிக்காவும் ஐநா வும் இலங்கை அரசை மிரட்டுவதற்கு இன்னும் ஏன் தயங்கிக் கொண்டே இருக்கின்றன.... என்றெல்லாம்தான் நமது 'தமிழ் அரசியலாய்வுகள்' வருகின்றனவே தவிர,

அவர்களெல்லாம் என்னத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு, நாம் இனி எப்படி நடந்து கொள்ள வேண்டும்? நடைமுறைக்கு நமக்குச் சாத்தியமாகக் கூடியது எது? நாம் எங்கிருந்து தொடங்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் நம் ஆய்வுக் கொழுந்துகளுக்குச் சொல்ல முடியாமலிருப்பது ஏன்?

- ஆசிரியர்

# அங்கவீனமடைந்தவர்களின் வாக்களிப்பை இலகு படுத்த வேலைத்திட்டம்

## தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

அங்கவீனமடைந்தவர்களுக்கும், முதியோர்களுக்கும் வாக்களிப்பை இலகுபடுத்தும் தேசிய வேலைத திட்டத்தினை எதிர்வரும் தேர்தலில் இருந்து நடைமுறைப்படுத்துவதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசபபிரிய தெரிவித்தார்.

வெகுசன ஊடக அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் தொடர்பில் ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், நமது நாட்டில் வாக்களிப்பு நிலையங்களாக பொது பிரதேசங்களான பாடசாலை, ஆலயங்கள் வாசிகசாலைகள் மற்றும் சமூக நிலையங்களே தேர்ந்தெடுக்கப்பட்டு வாக்களிப்புக்கள் இடம்பெற்று வருகின்றன.

இவற்றில் சில இடங்கள் வாசலில் இருந்து வாக்களிப்பு தளங்களுக்கு அதிக தூரம் நடக்க வேண்டியதாக அமைந்திருக்கும். சில பிரதேசங்கள் குறிப்பாக பாடசாலைகள் மாடிப் படிகளினூடாக ஏறி வாக்களிப்பு தளங்களுக்கு போக வேண்டியதாகவிருக்கும். இந்நிலையில் பல விசேட தேவையுடைய மக்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று அங்கு வாக்களிப்பதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக வயது வந்தவர்கள், விசேட தேவையுடையோர்கள் மற்றும் ஏதேனும் நோய் காரணமாக சக்கரநாற்காலியில் அமர்ந்துள்ளவர்கள், இவ்வாறானவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு அவர்களுக்கான விசேட வழிவகைகளை செய்யும் பொருட்டு அனைத்து வாக்குச்சாவடிகள் குறித்தும் ஆய்வொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் மூலம் இந்நாட்டில் அங்கவீனம் மற்றும் பலவீனமான நபர்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்படுகின்றன. படிகள் வாயிலாக ஏறிச் சென்று வாக்களிப்பு நிலையங்களுக்கு மாற்றீடாக குறித்த வாக்கெடுப்பு நிலையத்தின் நுழைவாயிலில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் எனவும் எதிர்காலத்தில் அவ்வாறு தடைகள் ஏதும் இன்றி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

மேலும் வாக்களிப்பு நிலையங்களின் நுழைவாயிலில் இருந்து வாக்களிக்கும் இடத்துக்கு அனுமதி வழங்கப்படுகின்ற தனியார் வாகனங்களுக்கு இடமளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களின் நுழைவாயிலிருந்து வாக்களிக்கும் இடத்துக்கு செல்வதற்கு அரசாங்கத்தின் செலவில் முச்சக்கரவண்டி ஒன்றை பாவிப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 15 வீதமானவர்கள் அதாவது சுமார் 10 இலட்சம் வாக்காளர்கள் அங்கவீனர்களாகவும் முதியோர்களாகவும் காணப்படுவதாக தெரிவித்த ஆணையாளர், 2030 ஆம் ஆண்டளவில் இத்தொகை 25 வீதமாக அதிகரிக்கும் எனவும் தெரிவித்தார்.

இதுவரையில் ஊவா மாகாணத்தில் காணப்படுகின்ற அனைத்து வாக்களிப்பு நிலையங்களும் அங்கவீனர்களுக்கும் முதியோர்களுக்கும் செல்வதற்கு இலகுவான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் எதிர்வரும் தேர்தல்களில் விசேட தேவையுடையவர்கள் இலகுவில் வாக்களிப்பதற்காக வாக்களிப்பு நிலையங்கள் தெரிவுசெய்யப்படும்.

அத்துடன் பிரதேசங்கள் மட்டுமன்றி அவர்களுக்குரிய பல விசேட வசதிகளும் மேற்கொள்ளப்படும் எதிர்வரும் காலங்களில் விசேட தேவையுடையோர்கள் வாக்களிப்பு நிலையங்களில் வந்து வாக்களிப்பு நிலைய பொறுப்பதிகாரி முன்னிலையில் வாக்களிக்க வசதிகள் மேற்கொள்ளப்படும் எனன்றார். இந்நிகழ்வில் ஊடக அமைச்சின் செயலாளர் கருனாரத்ன பரனவிதாரனவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரமாக செயற்பட சந்தர்ப்பம் வழங்கவில்லை

## முன்னாள் அமைச்சர் புலம்பல்

(கொழும்பு)

சுதந்திரமாக செயற்பட எனக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி டி சொய்ஸா தெரிவித்துள்ளார்.

வனவிலங்குத்துறை அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் தமது பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சின் அனைத்து விடயங்களையும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவே கட்டுப்படுத்தினார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமக்குத் தேவையான வகையில் அமைச்சுப் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், யானைக் குட்டியொன்றோ அல்லது விவசாயியோ கொல்லப்பட்டால் தமக்கு எதிராகவே குற்றம் சுமத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாரியளவில் காணிகளை அபகரித்தவர்கள் எவ்வித தண்டனையும் அனுபவிக்காது தப்பித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# வில்பத்து விவகாரத்தை விசாரிக்கக் குழு அமையும்

வில்பத்து விவகாரம் தொடர்பில் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக குழுவொன்று அமைக்கப்படும் என்றும், அமைச்சரவை உபகுழுவா அல்லது செயலாளர்கள் மட்டத்திலான குழுவா என்று அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.


அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. கேள்விநேரத்தின்போது, வில்பத்து விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். வில்பத்து விவகாரம் தொடர்பில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இது விடயம் குறித்து தனக்கு எதிராக சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு அமைச்சரவை உபகுழுவொன்றை அல்லது செயலாளர்களடங்கிய குழுவொன்றை அமைக்குமாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார். அமைச்சரவைக் கூட்டத்திலும் இதுபற்றி அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதுபற்றி விரைவில் முடிவெடுக்கப்படும். வடக்கிலிருந்து ஒரு இலட்சம் முஸ்லிம்கள் விரட்டப்பட்டனர்.

அவர்கள் தங்களது சொந்த பூமிக்குத் திரும்பவேண்டும். மீள்குடியேற்றத்தைத் தடுக்கமுடியாது என்பதுடன் மக்களை விரட்டவும் முடியாது. நான் காணி அமைச்சராக இருந்த காலத்தில்கூட சில சரணாலயப் பகுதிகளில் குடியேற்றங்களுக்காக காணிகள் வழங்கப்பட்டன. எனவே, வில்பத்து விடயத்தில் ரிசாத் மீதோ அல்லது அரச அதிபர் மீதோ மட்டும் குற்றச்சாட்டுகளைச் சுமத்திவிட முடியாது. கடந்த அரசில் அங்கம் வகித்த அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும். சில தரப்புகளால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் ஏற்புடையதல்ல என்றார்.

**சிறு வயதில், என் வீட்டிலிருந்து பார்த்த நட்சத்திர கூட்டங்களை, இன்று என்னால் அதே வீட்டிலிருந்து பார்க்க முடிவதில்லை. என் வீட்டிலிருந்து மட்டுமல்ல, பெரும்பாலான மனிதர்கள் வாழும் இடங்களிலிருந்தும் பார்க்க முடிவதில்லை. காரணம், ஒளி மாசு (Light Pollution). நமது சுற்றுச்சூழல், இரவு நேரங்களில் அதிவெளிச்சத்துடன் வைக்கப்பட்டுள்ளது. இந்த செயற்கை ஒளிக்கிடையில், நட்சத்திரங்களிலிருந்து பல நூறு அல்லது ஆயிரம் ஆண்டுகளாக பயணம் செய்து வரும் மெல்லிய ஒளியை உணரும் தன்மை நம் கண்களுக்கு இல்லை.**



# நட்சத்திரங்கள்

**டி.கே. அகிலன்**

சமீபத்தில் ஒருநாள், ரயில் பயணத்தின் போது, இரவு உறக்கத்திற்கு முன் ரயில் பெட்டி வாசலில் சற்று நேரம் நின்றேன். எதேச்சையாக வானை நோக்கிய பார்வையில் வெறும் இருட்டுத்தான் தெரிந்தது. சிறு வயதில் பார்த்திருந்த, எண்ணிக்கையில் அடங்காத நட்சத்திரங்களை அங்கு பார்க்க முடியவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில நட்சத்திரங்களே தெரிந்தன. நிலவு இன்னும் வானத்தில் தோன்றியிருக்கவில்லை. எனவே நட்சத்திரங்கள் தெரியாமல் இருக்க நிலவொளி காரணமில்லை. அங்கு நட்சத்திரங்களைக் காணவில்லை!

கடைசியாகக் கண் குளிர நட்சத்திரங்களை நான் பார்த்தது, சுமார் ஒரு வருடத்துக்கு முன்னால். தொழில் நிமித்தமாகச் சவுதி அரேபியா கடற்பரப்பில், வேலைத் தளத்திலிருந்து கரையை நோக்கி இரவு தொடங்கும் நேரத்தில் கிளம்பி, படகில் வந்த 3 மணி நேர பிரயாணத்தில்தான்.

பயணம் தொடங்கியதிலிருந்து, சுமார் ஒருமணிநேரம் வரையும் காணும் திசையெல்லாம் பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயுக்காக, பூமியை ட்ரில்லிங் இயந்திரங்களைக் கொண்டு வன்புணர்வின் மூலம் உருவாக்கிய துளைகள் புடைப்புகளாக எழுந்து நின்றிருந்தன. சுகப்பிரசவமாகவும் (Natural Flow) சிசேரியனாகவும் (Forced Flow – Gas Injection/Water Injection) எடுக்கப்படும் பெட்ரோலியமும் இயற்கைவாயுவும் கடலின் அடியில் பதிக்கப்பட்டிருந்த குழாய்கள் மூலம் சற்றே தொலைவில் உள்ள நிலையங்களுக்குச் செலுத்தப்பட்டுக் கொண்டிருந்தன.

பிரசவத்தின் பக்க விளைவாக வெளிவரும் தேவையற்ற வாயுக்களையும், கையாளக்கூடிய அளவுக்கு அதிகமாக வரும் இயற்கை வாயுவையும் எரிக்கும் எரிகோபுரங்களின் (Flare) பளிச்சிடும் வெளிச்சம், வானத்தின் இருளை வெளிச்சத்திரை போட்டு மறைத்திருந்தது. அந்தப் புடைப்புகளின், திரைகளின் எல்லைகளைக் கடந்த பின், வானம் நட்சத்திரங்களுடன் கலைகளை நிகழ்த்த தொடங்கியிருந்தது. கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் ஒரு வகையான மனக்கிளர்ச்சி நிலையில் இருந்தேன்.

என் சிறு வயதில் வீட்டுக்கு வெளியே கோடை இரவுகளில் அவ்வளவு நட்சத்திரங்களைக் கண்ட நினைவுகள். இடைப்பட்ட காலத்திலும் எங்கேனும் பார்த்திருப்பேன். ஆனால் நினைவில் இல்லை.

நட்சத்திரங்கள் அளக்க முடியாத விண்ணில் நிகழும் வாழ்க்கைகள். எரிந்து, எரிதலின் மூலம் வாழ்ந்து, எனவே அழிந்து கொண்டிருக்கும் பொருண்மை (Mass) பொருட்கள்தான் நட்சத்திரங்கள். சூரியன்தான் நமக்கு மிக அருகில் உள்ள நட்சத்திரம். சூரியனை, அதன் இயக்கத்தினால், அதன் சக்தியினால் வாழும் நாம், நட்சத்திரம் எனக் கூறுவது சரியா எனத் தெரியவில்லை.

சூரியனிலிருந்து வெளிப்படும் ஒளி நம்மை வந்து அடைய 8.32 நிமிடங்கள் ஆகிறதாம். ஒளி ஒரு வினாடிக்கு சுமார் 300000 கி.மீ (சரியாகக் கூறினால் 299792 கி.மீ.) தூரம் செல்லும். அல்லது ஒளியை பூமியைச் சுற்றிவருமாறு செய்தால், ஒரு வினாடிக்கு சுமார் 7.5 முறைகள் சுற்றி வரும்.

நமக்கு மிக அருகிலுள்ள நட்சத்திரம் Proxima Centauri எனப் பெயரிடப்பட்டுள்ளதாகும். அது வெளியிடும் ஒளி நம்மை வந்தடைய 4.22 வருடங்கள் ஆகும். ஒளி வருடம் என்பது, ஒரு வினாடிக்கு 3 இலட்சம் கி.மீ. வேகத்தில் பயணிக்கும் ஒளி, ஒரு வருடத்துக்கு பயணிக்கும் தூரமாகும். அதாவது, இப்போது நாம் பார்க்கும் Proxima Centauri, உண்மையில் இப்போது இருக்கும் Proxima Centauri அல்ல. அது 4.2 வருடங்களுக்கு முன்பிருந்த Proxima Centauri.

ஒரு பொருளைப் பார்ப்பது என்பது, அந்தப் பொருள் வெளியிடும் அல்லது எதிரொலிக்கும் ஒளி நம் கண்களை வந்தடைந்து, அங்கிருந்து மூளைக்குச் சென்று, மூளை அந்த ஒளி நிழல்களை நினைவுகளில் நிறைந்திருக்கும் பொருள்களாக்கி, தோற்றத்தை அளிக்கிறது. நாம் காணும் பொருட்கள் பெரும்பாலும் சில கி.மீ. தூரத்துக்குள் இருப்பதால், வினாடிக்கு 3 இலட்சம் கி.மீ. பயணிக்கும் ஒளி, நாம் பார்க்கும் அந்த நேரத்துளியின் பொருட்களின் தோற்றத்தை அளிக்கிறது. ஆனால் Proxima Centauri வெளியிடும் ஒளி நம்மை அடைய, 4.22 வருடங்கள் ஆவதால், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாம் பார்க்கும் அந்த நட்சத்திரம், அந்த நேரத்திற்கு 4.22 வருடங்களுக்கு முன்பு எவ்வாறு ஒளியை உமிழ்ந்தது என்பதையே.

வெறும் கண்களால், டெலஸ்கோப் உதவியில்லாமல், காணமுடியும் மிகத் தொலைவிலுள்ள நட்சத்திரம், டெனப் (Deneb) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த நட்சத்திரம் சுமார் 1400 ஒளி வருடங்களிலிருந்து 7000 ஒளி வருடங்கள் வரை இருக்கலாம் என கூறப்படுகிறது. ஒரு வினாடிக்கு 3 இலட்சம் கி.மீ வேகத்தில் பயணிக்கும் ஒளி, குறைந்த பட்சம் 1400 வருடங்கள் பயணித்து, நம்மை வந்தடைகிறது. இவை அனைத்துக்கும் மேல், நம் சூரிய குடும்பம், வினாடிக்கு 200 கி.மீ. வேகத்தில் பால்வெளியில் (Milky Way) சென்று கொண்டிருக்கிறது. எனவே தொலைவில் உள்ள நட்சத்திரத்தை நோக்கி சூரிய குடும்பம் செல்கிறதா அல்லது எதிர்திசையில் செல்கிறதா என்பதைப் பொறுத்து, தொலைவிலுள்ள நட்சத்திரத்தின் ஒளி நம்மை வந்து அடைவதற்கான நேரம் சற்றே மாறுபடலாம். பால்வெளி என்பது நம் குடும்பத்தலைவனாகிய சூரியன் என்னும் நட்சத்திரம் அமைந்திருக்கும் கலக்ஸி.

நாம் வாழும் பிரபஞ்சத்தின் அளவையும், அதில் தன்னை பெரிய "இதுவாக" கருதிக்கொண்டிருக்கும் சாதாரண மனிதனையும் (நம்மையும்) ஒப்பிட, விரும்பவில்லை என்றாலும், சில எண்ணிக்கைகளை அறிந்தாக வேண்டும். கலக்ஸி என்பது, ஈர்ப்பு விசையினால் ஒரு மையத்தை அடிப்படையாகக் கொண்டு, எனவே ஒன்றுடன் ஒன்று நாம் அறிந்துகொள்ள முடியாத விசையால் பிணைக்கப்பட்டிருக்கும் கோடிக்கணக்கான நட்சத்திரங்களின் தொகுப்பு.

**நட்சத்திரங்கள் அளக்க முடியாத விண்ணில் நிகழும் வாழ்க்கைகள். எரிந்து, எரிதலின் மூலம் வாழ்ந்து, எனவே அழிந்து கொண்டிருக்கும் பொருண்மை (Mass) பொருட்கள்தான் நட்சத்திரங்கள்.**

கவனிக்கவும் - பால்வெளி கலக்ஸியில், நம் குடும்பத்தலைவனான சூரியன் ஒரு சிறிய நட்சத்திரம் மட்டுமே. பால்வெளியில் சூரியனைப்போன்ற 100 பில்லியன் முதல் 200 பில்லியன் நட்சத்திரங்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது 1 இலட்சம் கோடி முதல் 2 இலட்சம் கோடி நட்சத்திரங்கள், பால்வெளியில் மட்டும்.

பால்வெளி, நாம் இருக்கும் பிரபஞ்சத்தில் உள்ள ஒரு நடுத்தர அளவிலான கலக்ஸி. இதுபோல கிட்டத்தட்ட 170 பில்லியன் கலக்ஸிகள் இருக்கக்கூடும் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கைகள் அனைத்தும் சில அடிப்படை அறிவியல் விதிகளை ஆதாரமாகக் கொண்ட தோராயமான கணக்கிடல்கள் மட்டுமே. எனவே உண்மையான எண்ணிக்கை இவற்றிலிருந்து மிக அதிகமாகவோ, அல்லது குறைவாகவோ கூட இருக்கலாம்.

டெனப் நட்சத்திரம், பால்வெளியினுள் இருக்கும் ஒரு பெரிய நட்சத்திரம். வினாடிக்கு 3 லட்சம் கி.மீ. பயணிக்கும் ஒளி, 1400 வருடங்களுக்கும் அதிகமான நேரம் பிரயாணம் செய்து நம்மை அடைகிறது என்றால், பால்வெளியின் விஸ்தாரத்தைக் கற்பனை செய்வது என்பதே எளிய மனித மனங்களால் இயலாத காரியம்.

உதாரணமாக இன்று நம் வெறும் கண்ணால் பார்க்க முடியும் தொலை தூரத்து நட்சத்திரம் டெனப், கிட்டத்தட்ட ஏசுநாதர் வாழ்ந்த நாட்களில் எவ்வாறு இருந்தது என்பதையே. இப்போது அந்த நட்சத்திரம் வெளி விடும் ஒளியை காண, நம் வெகு தூரத்து சந்ததியினரால்தான் முடியும் (சந்ததிகளை நாம் வாழ அனுமதித்தால்). நம் அதீத நுகர்வின் மூலம், பேராசையின் மூலம், இந்தப் பூமியில் மனிதர்கள் வாழும் சாத்தியத்தைத்தான் மிக வேகமாக இல்லாமல் செய்து வருகிறோமே!

சிறு வயதில், என் வீட்டிலிருந்து பார்த்த நட்சத்திர கூட்டங்களை, இன்று என்னால் அதே வீட்டிலிருந்து பார்க்க முடிவதில்லை. தெளிவான வாதநிலை உள்ள நாட்களிலும், நிலவொளி இல்லாத நாட்களிலும் கூட! என் வீட்டிலிருந்து மட்டுமல்ல, பெரும்பாலான மனிதர்கள் வாழும் இடங்களிலிருந்தும் பார்க்க முடிவதில்லை. காரணம், ஒளி மாசு (Light Pollution). நமது சுற்றுச்சூழல், இரவு நேரங்களில் அதிவெளிச்சத்துடன் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்கை ஒளிக்கிடையில், நட்சத்திரங்களிலிருந்து பல நூறு அல்லது ஆயிரம் ஆண்டுகளாக பயணம் செய்து வரும் மெல்லிய ஒளியை உணரும் தன்மை நம் கண்களுக்கு இல்லை.

தினம்தோறும் வானத்து நட்சத்திரங்களை பார்த்த நாட்களில், என் வீட்டிலோ, சுற்றி இருக்கும் மற்ற வீடுகளிலோ மின் இணைப்பு இருந்திருக்கவில்லை. இப்போதோ எல்லா வீடுகளிலும், தெருக்களிலும், குச்சொழுங்கைகளிலும் கூட மின்கம்பங்களும் அவற்றில் தொங்கும் தெரு விளக்குகளும் வீடுகளின் முகப்பில் இரவு முழுவதும் எரியும் ஊகுடு விளக்குகளும் படிப்படியாக நட்சத்திரங்களை மனிதர்களின் கண்களிலிருந்து மறைத்திருக்கவேண்டும்.

நட்சத்திரங்களை குவிந்த மனதுடன் பார்க்கும் ஒருவன், பிரபஞ்சத்தின் விரிவை உணர முடியலாம். அந்த விரிவை மனதிலும் விரித்தெடுக்கலாம். அவன் அகங்காரம், அவனை விட்டு அகன்று விடும்- குறைந்த பட்சம் வாழ்க்கையை அனுபவிக்கும் அளவுக்காவது.... வாழ்க்கையை வாழும் அளவுக்காவது....

நட்சத்திரங்களை ஒளியைக்கொண்டு மறைத்ததன் மூலம் மனவிரிவை அடைய உதவும் ஒரு இயக்கத்தையும் இழந்து விட்டோம். உறக்கத்துக்கு நடுவில் வீட்டிற்கு வெளியே வர வேண்டியிருக்கும் நடு இரவுகளில், வானத்தை அண்ணாந்து பார்ப்பதை என்னால் தவிர்க்க முடிவதில்லை. அடையும் ஏமாற்றத்தையும்தான்....

# இலங்கையில் மௌனயுத்தம் தொடர்ந்தும் இடம்பெறுகின்றது

## அமெரிக்க ஆய்வு மையம் அறிக்கை

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் முடிந்திருக்கும் நிலையிலும் அங்கு மௌன யுத்தம் ஒன்று தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக அமரிக்க ஆய்வு மையமான ஓக்லாண்ட் இன்ஸ்ட்டிட்யூட் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

26 ஆண்டுகளாக இலங்கையில் தொடர்ந்த சிவில் யுத்தம் 2009 ஆம் ஆண்டு முடிவடைந்த பின்னர் முதற் தடவையாக அந்த நாட்டின் மனித உரிமை நிலைப்பாடுகள் குறித்து இந்த சுயாதீன அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழர் உள்ளிட்ட சிறுபான்மையினர் மீது இலங்கை அரசு திட்டமிட்ட வகையில் மனித உரிமை மீறல்களை மேற்கொண்டு வருகின்றது. ஆய்வுகளின் அடிப்படையில் அங்கு தமிழர் நிலங்களில் இராணுவக் குடியிருப்புகள் மற்றும் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றது சுட்டிக் காட்டியிருக்கிறது.

ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தொடர்ந்தும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் எனவும், இராணுவப் பிரசன்னத்துக்கு அவர்கள் தொடர்ந்தும் முகம் கொடுக்க வேண்டி இருப்பதோடு பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களின் புறந்தள்ளலுக்கும் உள்ளாகிறார்கள் என்றும், இது இன்னொரு வகை மௌன யுத்தம் ஆகும்.

அரச இராணுவத்தினராலும் பிரிவினை கோரிய தீவிரவாதிகளாலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் நில அபகரிப்பு உள்ளிட்ட போர்க் குற்ற விசாரணைகளை மேற்கொள்ள, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையம் எடுத்த முயற்சிகளுக்கு இலங்கை அரசு இடம் தரவில்லை எனவும் அந்த அறிக்கை சுட்டுக்காட்டுகிறது.

இந்த அறிக்கை தொடர்பாக மனித உரிமைகள் மற்றும் காணி விவகாரங்களில் சர்வதேச நிபுணத்துவம் பெற்ற அனுருத்த மித்தாலினாலும், ஒக்லாண்ட் மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரினாலும் 2014 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் பல களப் பணிகளையும் நூற்றுக்கணக்கான நேர் காணல்களையும் உள்ளடக்கியதாய் அமைந்தது.

இதுவே போர் முடிவுக்குப் பின்னரான முதலாவது தேடலாக அமைந்தது. அறிவு சார்ந்ததாக அமைந்த இந்த விசாரணைகளில இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்கவில்லை. அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி இலங்கைக்கு விஜயம் செய்து புதிய அரசாங்கத்தை பாராட்டி ஆதரவு தருவதாக தெரிவித்திருக்கும் பின்னணியில் இந்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

போரின் நீண்ட நிழல் என்ற தலைப்போடும் இலங்கைப் போரின் பின்னரான நீதிக்கான பாடுகள் என்ற உபதலைப் போடும் வெளியாகி இருக்கும் இவ்வறிக்கையில் பல விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

யுத்தம் முடிந்து ஆறு ஆண்டுகள் ஆனபோதிலும் தமிழரின் பாரம்பரியப்பிரதேசத்தில் 160,000 இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.

அங்கு வாழும் தமிழரின் மக்கள் தொகையை கணக்கில் கொண்டுபார்த்தால் ஆறு தமிழருக்கு ஒரு இராணுவத் தினர் என்கிற வகையில் இது அமைந்திருக்கிறது என ஒக்லாந்து நிறுவனத்தின் அறிக்கை கூறுகிறது.

மக்களிடம் இருந்து கையகப் படுத்தப்பட்ட நிலங்களில் இராணுவத்தினர் பெருமெடுப்பிலான கட்டுமானப் பணிகளிலும், உல்லாச விடுதிகள் அமைப்பது உள்ளிட்ட வியாபரப் பணிகளிலும் ஈடுபடுகிறார்கள். நிலமிழந்த மக்கள் இடப்பெயர்வு வாழ்வில் தவிக்கிறார்கள் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரணிலுக்கு எதிரான தீர்மானத்தில் நிச்சயம் கையொப்பமிடுவேன்

## உறுதியாகக் கூறுகிறார் நிமால்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தில் நிச்சயம் கையொப்பமிடுவேன் என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு தடை ஏற்படாத வகையில் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்படும்.

20ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளிக்க வேண்டும் என்பதே சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஏகமனதான தீர்மானமாகும்.

இதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அனைத்து தலைவர்களும் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.



ரவி கருணாநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் எதிர்வரும் 9ஆம் திகதி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென கோருகின்றோம்.

ஜூன் மாதம் மூன்றாம் வாரத் தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள அவைத் தலைவர் லக்ஸ்மன் கிரியல்ல இணக்கம் வெளியிட்டுள்ளார் என நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

# நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்நோக்க அரசாங்கம் தயார்

## அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா உறுதி

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்நோக்க அரசாங்கம் தயார் என அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

எந்தவொரு நம்பிக்கையில்லா தீர்மான யோசனையையும் எதிர் நோக்கத் தயார். அவ்வாறான நமபிக்கையில்லா தீர்மானம் ஒன்றையே ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்த்திருக்கின்றது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் பல கோடி ரூபா மோசடி செய்தவர்கள் இந்த அரசாங்கத்தை கவிழ்க்க முயற்சிக்கின்றனர்.

ஊழல் மோசடிகாரர்களுக்கு தேவையான வகையில் அரசாங்கத்தை கவிழ்க்க இடமளிக்க முடியாது.

ரணில் விக்கிரமசிங்க நாட்டில் இருக்கும் அரசியல்வாதிகளில் தூய்மை யானவர். நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து அவர் மீது சேறு பூச முயற்சிக்கப்படுகின்றது.



நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை கொண்டு வந்து தங்கள் பக்கத்திற்கு பிரசாரம் தேட சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முயற்சிக்கின்றார்கள் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# வெற்றிலைச் சின்னத்தில் பிரதமராக போட்டியிட மகிந்தவுக்கு வாய்ப்பு வழங்க முடியாது

## ஜனாதிபதி உறுதி

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிலை சின்னத்தின் கீழ் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு முன்னாள் ஜனாதிபதிக்கு வாய்ப்பை வழங்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்தவேளையே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட சந்திப்பின்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நியமிக்கும் யோசனை குறித்த ஜனாதிபதியின் கருத்தை கோரியுள்ளனர். அதற்கு பதிலளித்த சிறிசேன,

ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக, பிரதமராக, இரு தடவைகள் ஜனாதிபதியாக பல காலம் பல பதவிகளை வகித்துவிட்டார், இதனால் பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தை வேறு ஒருவரிற்கு வழங்கவேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி தனக்கு ஒத்துழைப்பை வழங்குமாறும் கோரியுள்ளார். எனினும் ராஜபக்ஷவிற்கு வாய்ப்பை வழங்க ஜனாதிபதி மறுத்ததை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

# ரணிலுக்கு எதிரான பிரேரணையை ஜனாதிபதி ஆட்சேபிக்கவில்லை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கொண்டுவரத் தீர்மானித்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்று அதன் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த எம்.பி. தெரிவித்தார். 20ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பிரதமர் ரணிலுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர ஐ.ம.சு.மு. எதிர்பார்ப்பதாகவும், தற்போது எம்.பிக்களின் கையொப்பங்களைப் பெறும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குட் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



# போலிப்பிரசாரங்களைக் கண்டு மக்கள் ஏமாறக் கூடாது

## சரத்பொன்சேகா ஆலோசனை

(கொழும்பு)

மக்கள் போலிப் பிரசாரங்களைக் கண்டு ஏமாற்றமடையக் கூடாது இனவாதத்தை தூண்டும் வகையில் சிலர் செயற்பட்டு வருகின்றனர் என முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்ஸல் சரத் பொன்சேகா தெரவித்துள்ளார்.

பாதுகாப்பு விவகாரங்களில் தமக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், படையினரும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மக்களினால் நிராகரிக்கப்பட்ட சில அரசியல்வாதிகள், இனவாதத்தை தூண்டி மக்ளை அச்சமடையச் செய்ய முயற்சிக்கின்றனர. வடக்கு கிழக்கு மக்கள் மீது தெற்கு மக்கள் சந்தேகத்தை உருவாக்கிக் கொள்ளவும், அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழக்கச் செய்யவும் சில தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

சில தரப்பினர் தங்களது அரசியல் இலக்குகளை அடைவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

பயங்க ரவாதம் காரணமாக மட்டும் நாட்டில் இருள் சூழவில்லை எனவும், யுத்தத்தின் பின்னரான ஊழல் மோசடிகளினாலும் நாடு இருளடைந்துள்து.

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES

Applications are invited by me up to 30th June, 2015 from suitably qualified persons for the following posts.

**1. ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION) (University of Jaffna)**

**Qualifications:**

Should possess a Bachelor of Law Degree from a recognized University/HEI or Attorney-at-Law with not less than three (03) years of experience gained in Court work, Legal work and drafting legal documentation in a State/ Corporation or Reputed Private Sector Organization or official bar.

**Salary Scale** : U- EX1 (II) -Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12X645 - 36,160/-p.m.

**Selection** : By Structured Interview.

**2. UNIVERSITY MEDICAL OFFICER (University of Jaffna/ Vavuniya Campus/ University of Jaffna – Kilinochchi Premises)**

The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.

NOTE: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting of study leave to the selected candidates to obtain postgraduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale** : U- MO 1 (II) - Rs. 28,360 – 10 x 645 ; 1 x 790 – 35,600/- p.m.

**Selection** : By Interview.

**3. CURATOR (LANDSCAPE) GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

1. Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/ Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**OR**

2. Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale**: U- EX1 (II) -Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12X645 - 36,160/-p.m.

**Selection** : By Interview.

**4. MARSHAL GRADE II (University of Jaffna)**

**Qualifications:**

i. A Graduate from a recognized University
ii. Physique: Height : 5' 5"
Chest: 32" deflated

Note:- Preference will be given to those who show record of active participation in Sports Activities, Social Welfare Activities within the University or at National Level and those who have a background of Police or Armed forces.

**Salary Scale** : U-MN 2 (II) - Rs.19,470 – 18 X 245 - 23,880/- p.m.

**Selection** : By Interview.

**5. SUPERVISOR (LANDSCAPE) GRADE III (Vavuniya Campus)**

**Qualifications:**

i) G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings.

**AND**

ii) Successful completion of one year's practical training course in Agriculture conducted by the Department of Agriculture or equivalent.

**Salary Scale: U-MT1 (IIIA) - Rs.16,535 - 7x155; 10x185 - 19,470 p.m**

**Selection** : By Interview

**6. PUBLIC HEALTH INSPECTOR GRADE III (University of Jaffna)**

**Qualifications:**

Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Salary Scale** : U-MT 1 (III A) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.

**Selection** : By Interview

**7. PUBLIC HEALTH NURSE (University of Jaffna)**

**Qualifications:**

a) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 12 years experience as a Nurse of which 8 years should be either in Student Health Service or Public Health Service in a recognized Institution.

**OR**

b) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 10 years experience as a Nurse and possessing post primary qualifications in any aspects of nursing.

**Salary Scale** : U-MT 1(II) - Rs. 18,360 – 7x185; 9x245 – 21,860 p.m.

**Selection** : By Aptitude Test and Interview

**8. NURSING OFFICER GRADE II (University of Jaffna/ Vavuniya Campus)**

**Qualifications:**

(i) GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.

**AND**

(ii) Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.

**Selection** : By Aptitude Test and Interview

**9. POST OF PHARMACIST (LOWER GRADE)**

**Qualifications:**

Certificate of competence as a qualified Pharmacist recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.

**Selection** : By Aptitude Test and Interview

**10. MECHANIC GRADE II (University of Jaffna/ University of Jaffna – Kilinochchi Premises)**

**Qualifications:**

i. Pass in the 8th standard
ii. Should be conversant with
   a. Reading scales, micrometers and recording fractional dimensions;
   b. Specialized types of fitting of plant and machinery of steam, motor and diesel or the operation of workshop machinery such as lathes milling machines and shaping machines;
   **and**
   c. Reading and understanding drawings,
iii. Not less than 2 years' experience as a mechanic or machine Operator.

**Salary Scale** :U-PL 3 (III) Rs.15, 650 – 16x140 -17,890.p.m

**Selection** : By Trade Test and Interview

**AGE LIMIT : Not more than 45 years for the above all posts.**

**Note:** ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3. Gratuity payment.
4. Employment trust fund.
5. Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non–Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University or the forms available in the University website (www.jfn.ac.lk) annex with the Money Order/ Postal Order to the value of Rs.100/-. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.10.00 stamped envelope of 23x10cm. in size. Only Applications sent on the specified form will be accepted. **(Please annexed copies of relevant documents)**

Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

REGISTRAR
26/05/2015

C/3864

# பிரெஞ் ஓப்பன்; 3ஆவது சுற்றில் செரீனா, நடால்



(பரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ரபெல் நடால், செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் அபாரமாக ஆடி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினர். கஸ்னட்சோவா, வோஸ்னியாக்கி ஆகியோர் அதிர்ச்சி தோல்வி அடைந்தனர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்று வருகின்றது. இதில் 2ஆம் சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. மகளிர் ஒற்றையர் பிரிவில் முதல்நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ஜேர்மனியின் அன்னா லினா பிரை எட்சமை எதிர்த்து விளையாடினார். முதல் செட்டில் செரீனாவை 5-7 என்ற கணக்கில் வென்று அதிர்ச்சி அளித்தார் அன்னா.

ஆனாலும் சுதாகரித்து ஆடிய செரீனா அடுத்த 2 செட்களில் எளிதாக வெற்றியை வசப்படுத்தினார். அவர் 5-7, 6-3, 6-3 என்ற செட்களில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு முன்னணி வீராங்கனையான செக் குடியரசின் பெட்ரா குவித்தோவாவும் போராடி வென்றார். ஸ்பெயினின் சில்வியா சோலர் எஸ்பினோசாவை எதிர்த்து விளையாடிய குவித்தோவா 6-7, 6-4, 6-2 என்ற செட்களில் வென்று 3ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார். பெலராசின் விக்டோரியா அசரன்கா 6-2, 6-3 என்ற செட்களில் செக் குடியரசின் ஹெராடிகாவை வென்றார். தவிர, இத்தாலியின் எர்ராணி, ஜேர்மனியின் பெட்கோவிக் உள்ளிட்டோர் 3ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

5ஆம் நிலை வீராங்கனையான டென்மார்க்கின் வோஸ்னியாக்கி 4-6, 6-7 என்ற செட்களில் ஜேர்மனியின் ஜியோர்கசிடமும், 18ஆம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் கஸ்னட்சோவா 7-6, 5-7, 8-10 என்ற செட்களில் இத்தாலியின் ஷியாவோனிடமும் போராடி தோற்றனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்பு சம்பியனான ஸ்பெயினின் ரபெல் நடால் 6-4, 6-3, 6-1 என்ற செட்களில் ஸ்பெயினின் அல்மெக்ரோவை எளிதில் வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். குரோஷியாவின் சிலிக் 7-6, 6-1, 6-1 என்ற செட்களில் இத்தாலியின் அர்னாபோல்டியை வென்றார்.

அடுத்த சுற்று ஆட்டங்கள் மிகவும் கடினமானதாக அமையும் என்ற பயம் தனக்கிருப்பதாக குரோஷியாவின் சிலிக் தெரிவித்துள்ளார். நாளை சிலிக் மூன்றாவது சுற்றில் பங்கேற்கவுள்ளார்.

# டோனியிடம் ஹோலி; பாடம் கற்கவேண்டும்

(மும்பை)

தலைமைத்துவப் பண்புகள் குறித்து டோனியிடமிருந்து ஹோலி அதிக பாடங்களைக் கற்றவேண்டும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கபில்தேவ் தெரிவித்துள்ளார்.



இந்திய அணி அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் செய்தபோது டெஸ்ட் போட்டியிலிருந்து கப்டன் டோனி திடீரென ஓய்வு பெற்றார். இதையடுத்து இளம் வீரரான ஹோலி டெஸ்ட் அணிக்கு கப்டனாக நியமிக்கப்பட்டார். இந்திய அணி அடுத்த மாதம் பங்களாதேஷிற்கான சுற்றுப் பயணம் செய்து விளையாடுகிறது.

இந்த நிலையில் டோனியிடமிருந்து ஹோலி பாடம் கற்க வேண்டும் என்று முன்னாள் கப்டன் கபில்தேவ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது,

டோனிக்கு பின் கப்டன் பதவிக்கு தகுதியானவர் ஹோலி. அவர் கப்டன் பதவியில் எப்படி இருக்க வேண்டும் என்று டோனியிடம் பாடம் கற்க வேண்டும். களத்தில் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். கிரிக்கெட்டில் முதிர்ச்சித் தன்மை மிகமிக முக்கியம். அதை ஹோலி கற்றுக் கொள்ள வேண்டும். போட்டிகளில் டோனி நிறைய தவறுகள் செய்திருக்கிறார். அதில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நான் கூட தவறுகள் செய்திருக்கிறேன். அதில் இருந்து மீள வேண்டும். ஒவ்வொரு கப்டன்களும் வேறுவேறு பாணியை கடைப்பிடிப்பார்கள். தேர்வுக் குழு சரியான வீரரை தான் (ஹோலி) தேர்ந்தெடுத்து இருக்கிறது. ஆனால் அவர் களத்தில் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இந்திய அணியில் பல சூப்பர் ஸ்டார்கள் உள்ளனர். இப்போதைய கால கட்டத்தில் அணிக்கு பயிற்சியாளர் தேவையில்லை. ஒரு சிறந்த கப்டன் தேவை. இதேபோல் ஒரு முன்னாள் வீரர் போதும். அணியை சிறந்த முறையில் ஒருங்கிணைக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

ஒரு அணியை வழிநடத்துவதில் பல முன்னாள் வீரர்கள் (பயிற்சியாளர் மற்றும் உதவியாளர்) பங்கெடுப்பதை நான் விரும்பவில்லை. அணிக்கு ஒரு சிறந்த கப்டன் தேவை. இதேபோல் ஒரு முன்னாள் வீரர் போதும். அவர் பயிற்சியாளராக அல்ல. அணியை சிறந்த முறையில் ஒருங்கிணைக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

இது போன்ற உயர்ந்த நிலையில் உள்ள அணியில், வீரர்கள் சூப்பர் ஸ்டார்களாகவும், வலுமிக்கவர்களாகவும் இருக்கும் போது, அவர்களை திறம்பட கையாள்வது முக்கியம். மற்றபடி இப்போதைய் காலகட்டத்தில் அணிக்கு பயிற்சியாளர் தேவையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## சந்தர்போல் நீக்கம் ஜோன்சன் வருத்தம்

சந்தர்போல் சவால் நிறைந்த துடுப்பாட்ட வீரர் அவருக்கு எதிராக பந்து வீச விரும்பினேன். ஆனால், எங்களுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் நீக்கப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கின்றது என அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

மே.தீவுகளின் கிரிக்கெட் சபையின் முடிவை நான் மதிக்கின்றேன். இருப்பினும் அனுபவம் வாய்ந்த ஒரு வீரருக்கு மேலும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவேண்டும். உள்ளூரில் இப்போட்டி நடைபெறவிருப்பதால் அவருக்கான பிரியாவிடைத் தொடராகக்கூட அறிவித்திருக்கலாம். இது குறித்து மே.தீவுகளின் கிரிக்கெட் சபை மீள்பரிசிலனை செய்ய வேண்டும். சந்தர்போலுக்கு உரிய கௌரவம் அளிக்கவேண்டும். ஒரு பந்துவீச்சாளராக அவரை களத்தில் எதிர்கொள்ள விரும்புகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## துடுப்பாட்ட வீரர்களுக்கு சச்சின் அறிவுரை

சர்வதேச தரம் வாய்ந்த பந்துவீச்சாளர்களின் பந்துகளை எதிர்கொள்ள, கடின பயிற்சியின் மூலம் துடுப்பாட்ட வீரர்கள் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று, சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.



டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் மேலும் அவர் பேசியதாவது,

தொடர்ந்து புதுமைகளைப் புகுத்தி வரும் சர்வதேச பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ள, துடுப்பாட்ட வீரர்கள் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

இலங்கை வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவின் தலைமுடியைக் கவனிப் பதற்குப் பதிலாக, அவரது பந்து வீச்சை கவனித்தாலே, அவரை எளிதில் சமாளிக்கலாம்.

இந்திய டெஸ்ட் அணியின் கப்டனாக பொறுப்பேற்றதும் டில்லியில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்ரேலியாவை நாங்கள் வீழ்த்தினோம். 2005இல் சென்னையில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டி முடிந்ததும், பிற்பகலில் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது அடுத்து நடைபெறவுள்ள டில்லி டெஸ்டில் சதம் அடிப்பதாக கனவு கண்டேன். அதன்படியே பெரோஷா கோட்லாவில் சதம் அடித்து, டெஸ்ட் அரங்கில் 35 சதம் அடித்த சுனில் காவஸ்கரின் சதத்தை சமன் செய்தேன் என்றார்.

## கோல்டன் ஸ்பைக் தடகளம் உசைன் போல்ட் தங்கம்




செக்குடியரசு நாட்டில் நடைபெற்ற கோல்டன் ஸ்பைக் தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஜமேக்காவின் மின்னல் மனிதன் உசைன் போல்ட் தங்கப் பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

ஆஸ்ட்ரவா நகரில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற இப்போட்டியில் 20.13 விநாடிகளில் கடந்த உசைன் போல்ட் தங்கப் பதக்கம் வென்றார். இது 200 மீற்றர் ஓட்டத்தில் உசைன் போட்டின் இரண்டாவது உச்சபட்சப் பெறுபேறாகும். கடந்த 2009ஆம் ஆண்டு 19.19 விநாடிகளில் இலக்கை அடைந்திருந்ததே அவரின் சிறந்த பேறுபெறாகப் பதிவாகியுள்ளது.

வெற்றி குறித்து உசைன் போட்ல் குறிப்பிடுகையில், இந்த நாள் எனக்கு சரியான நாளாக அமையவில்லை. இருந்தாலும் காயம் அடையாமல் இருந்ததே மகிழ்ச்சி. இப்போது எல்லாம் சரியாகச் சென்று கொண்டிருக்கின்றது என்றார்.

## உபகரணங்கள் வழங்கல்



வடமராட்சி கிழக்கு, பொற்பதி சென்.பீற்றஸ் விளையாட்டுக் கழகத்திற்கு முன்னாள் மத்திய அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் நாற்பதாயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் கடந்த 25 ஆம் திகதி விளையாட்டுக்கழகத் தலைவர் இரத்தினம் தவசீலனிடம் பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதேச கிராமசேவையாளர் பாலசுந்தரம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஸ்ரீகாந்த் மற்றும் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் பிலிப்பையா யேசுரட்ணம், பொற்பதி கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் பாலசுப்பிரமணியம் ஸ்ரீமோகன், மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்குழுத் தலைவர் சிவலிங்கம் சிவகலாதன் என பலர் கலந்து கொண்டனர்.

# கோப்பாய் ம.வி, ஆவரங்கால், சோமஸ்கந்தா மாகாண மட்ட கரப்பந்தில் சம்பியன்




கோப்பாய் மகாவித்தியாலயம்




ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்




புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி




ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்




றிசாத்பதியுதீன் மகாவித்தியாலயம்




புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி




கிளி. பாரதி வித்தியாலயம்




சிறிசுமண மகாவித்தியாலயம்

(முள்ளியவளை)

மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியில் கோப்பாய் மகாவித்தியாலயம், ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம் மற்றும் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

வடமாகாண கல்வி அமைச்சின் விளையாட்டுப் பிரிவினால் நடாத்தப்பட்டு வரும் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி கடந்த 26,27ஆம் திகதிகளில் முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15, 17 மற்றும் 19 வயதுப் பிரிவு அணிகள் மோதிக் கொண்டன.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் கோப்பாய் மகாவித்தியாலய அணியும் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணியும் மோதிக் கொண்டன. இரு அணிகளுமே அடிக்கடி ஒன்றை ஒன்று எதிர்கொண்ட அனுபவமுடையதால் இப்போட்டி மிகுந்த விறுவிறுப்பாக அமைந்திருந்தது. முதல் செட்டை ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி 25-23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் வீறுகொண்ட கோப்பாய் மகாவித்தியாலய அணி அடுத்தடுத்து இரு செட்களையும் 25-23, 25-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியதுடன் இறுதியில் 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது..

மூன்றாமிடத்திற்கான போட்டியில் மன்னார் றிசாத் பதியுதீன் மகாவித்தியாலய அணியும் முள்ளியவளை தண்ணீரூற்று முஸ்லிம் மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் றிசாத்பதியுதீன் மகாவித்தியாலய அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணியும் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 2-1 என்ற செட் கணக்கில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் கிளிநொச்சி பாரதி வித்தியாலய அணியும் கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கிளிநொச்சி பாரதி வித்தியாலய அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அணியும் வவுனியா சிறிசுமண மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் முதல் செட்டை சிறிசுமண மகாவித்தியாலய அணி 26-25 என்ற கணக்கில் வெற்றிபெற்று முன்னிலை பெற்றது. இதன் பின்னர் எழுச்சி பெற்ற புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி அணி 28-16 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டாவது செட்டை வென்று பதிலடி கொடுத்தது. வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதிச் செட்டில் இரு பாடசாலை அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 35-33 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்ற ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியும் முல்லைத்தீவு சம்பத்நுவர மகாவித்தியாலய அணியும் மோதிக் கொண்டன. இதில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் கோட்ட, வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், விளையாட்டுக்கான பொறுப்பாசிரியர்கள், அதிபர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




## ஸ்கந்தா, யாழ்.மத்தி மோதல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், யாழ். மத்திய கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்குமிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நாளை மறுதினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரு அணிகளும் பயிற்சிப் போட்டிகள் பல அணிகளை வீழ்த்தி சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுள்ளதால் இப்போட்டி மிகுந்த பரபரப்பு மிக்கதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சொந்த மைதானம் என்பதால் யாழ். மத்திய கல்லூரி அணிக்கு வெற்றிபெற அதிக வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஏகாதிபத்திய சக்திகளின் சுயநல ஊடுருவலைத் தோற்கடிக்க வேண்டும்!

வானவில் 53 இதழிலிருந்து.

இவ்வருடம் ஜனவரி 08ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று புதிய அரசாங்கம் அமைந்த பின்னர், நாட்டின் ஆட்சி முறையிலும், மக்களின் நாளாந்த வாழ்விலும் பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மாற்றங்கள் என்பது இயல்பானவையும், தவிர்க்க முடியாதவையும் என்பது நம் எல்லோருக்கும் தெரியும்.

எனவே ஒரு தனி மனிதனும் சரி, ஒரு நாடும் சரி, மாற்றங்களை ஒருபோதும் தவிர்த்துவிட்டு வாழ முடியாது. ஆனால் அந்த மாற்றங்கள் நல்ல வழியில் நடந்தால் மட்டுமே அதனால் பயன் உண்டு. அப்படி நல்ல வழியில் மாற்றங்கள் நடப்பதற்கு மனிதப் பிரயத்தனம் மிக அவசியமானது.

ஜனவரி 08 இல் நடைபெற்றது ஜனாதிபதித் தேர்தல் ஆகையால், மக்கள் ஜனாதிபதியை மாற்றினார்களேயொழிய, நாடாளுமன்றத்தை மாற்றவில்லை. ஜனாதிபதித் தேர்தலுடன் சேர்த்து அதற்கான வேண்டுகோளும் விடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நாட்டின் ஆட்சியிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.


புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தன்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதில் விட்டுக் கொடுப்பையும், ஆதரவையும் வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சிக்கும், அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நன்றிக்கடன் செலுத்துவதற்காக, நாட்டின் ஜனநாயக மரபையும், நடைமுறைகளையும் மீறி, எந்த நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்தாரோ, அந்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியே ஐ.தே.க. அரசாங்கம் அமைய வழி செய்ததோடு, ரணிலை பிரதமராகவும் முடிசூட்டி வைத்தார்.

இதனால் உலகில் எங்குமே நடைபெறாத வகையில், 225 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் வெறுமனே 48 உறுப்பினர்கள் கொண்ட ஐ.தே.க. அரசாங்கம் நடாத்துகிற விந்தை நடைபெற்றது.

அதன் பின்னர் என்ன நடந்தது? சொல்லப்பட்ட 100 நாள் வேலைத் திட்டம், நல்லாட்சி என்பதை எல்லாம் ஒருபக்கம் வைத்துவிட்டு, அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதற்காக, குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதிலும், கைது நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் இறங்கினர்.

அதுமட்டுமல்ல. புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் முன்னைய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட சகல அபிவிருத்தி நடவடிக்கைகளும் கைவிடப்பட்டுள்ளன. நிதி நெருக்கடி ஏற்பட்டு, திறைசேரி காலியாகி, அரச ஊழியர்களுக்கே சம்பளம் கொடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

நீண்டகால அனுபவம் மிக்க அரச நிர்வாகிகள் பழிவாங்கப்பட்டு, பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதால், அரச நிர்வாகம் முடங்கிப்போய் உள்ளது. நீதித்துறை, பொலிஸ்துறை மற்றும் ஆயுதப்படைகள் அரசியல்மயப் படுத்தப்படுகின்றன. இலங்கையின் நெருக்கடியான காலங்களில் தன்னலம் பாராது உதவி புரிந்த சீனா, ரஸ்யா போன்ற உலகின் பலம் வாய்ந்த நாடுகள் ஒதுக்கப்பட்டு, மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளுக்கு ஆதரவான வெளிநாட்டுக் கொள்கை பின்பற்றப்படுகிறது. இப்படி இன்னும் பல.




ஐ.தே.க. அரசாங்கம் பின்பற்றும் இத்தகைய கொள்கைகளை இலங்கை மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. 1956, 1970, 2004 ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் ஐ.தே.க. தோற்கடிக்கப்பட்டது. இப்பொழுது கூட அது மக்கள் ஆணை பெறாமல் கபடத்தனமான முறையிலேயே ஆட்சியைப் பிடித்துள்ளது.

ஐ.தே.க.வை ஆட்சி அதிகாரத்திலிருந்து விரட்டுவதாயின் மைத்திரியும் சந்திரிகாவும் சில வழிவகைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதில் முதலாவதும் முக்கியமானதுமான விடயம், என்ன விலை கொடுத்தேனும், விட்டுக்கொடுப்புச் செய்தேனும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒற்றுமையைக் குலைய விடாமல் காப்பது. இரண்டாவது விடயம், முற்போக்கு சக்திகள், ஜனநாயக சக்திகள், தேசபக்த சக்திகள் கொண்டு அமைக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கட்டமைப்பைத் தொடர்ந்தும் பேணுவது.

இந்த விடயத்தில் ஏற்கெனவே 1977இல் ஒரு கசப்பான அனுபவம் இருக்கின்றது. அன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், இடதுசாரிக் கட்சிகளுக்கும் இடையில் பிளவு தோன்றியதால்தான், ஐ.தே.க. அமோக வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது. இன்றும் அப்படியொரு நிலையை உருவாக்கத்தான் ஐ.தே.க. நினைக்கிறது.

இந்த விடயத்தை சுதந்திரக் கட்சியின் மகிந்த அணியும் கவனத்தில் கொள்வது அவசியமானது. ஏனெனில் ஒரு கைவீசி ஒலி எழும்பாது. ஏற்கெனவே சுதந்திரக் கட்சியின் இன்றைய தலைமைப் பதவியை வகிக்கும் ஜனாதிபதி மைத்திரிக்கும், முன்னாளைய ஜனாதிபதியும், சுதந்திரக் கட்சியின் போசகர்களில் ஒருவராகப் பதவி வகிக்கும் மகிந்தவுக்கும் இடையில் தமது முரண்பாடுகளைச் சீர்செய்வதற்கான பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவையும் உள்ளடக்கி அதைத் தொடர வேண்டும். அதன் மூலமே இலங்கையைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதற்கு வியூகம் அமைத்துச் செயற்படும், ஏகாதிபத்திய சக்திகளின் நோக்கங்களையும், அதற்கு உதவியாகச் செயற்பட்டு வரும் ஐ.தே.க. வையும் தோற்கடிக்க முடியும். தனிநபர் நலனை விட தேசத்தின் நலனை முன்னிறுத்துவதே இன்றைய முதல் தேவையாகும்.

# ஹொகிங் அளித்த ஆறுதல்!



விஞ்ஞானி ஸ்டீபன் ஹொகிங், வியக்க வைத்துக்கொண்டே இருக்கிறார். மோட்டார் நியூரோன் பாதிப்பால் அவரது குரலையும், உடல் அசைவுகளையும் தான் முடக்க முடிந்திருக்கிறதே தவிர அவரது சிந்தனையை அல்ல. 70 வயதைக் கடந்த நிலையிலும் அவரது அறிவியில் மூளை சுறுசுறுப்பாக இருக்கிறது. சக்கர நாற்காலியில் வலம் வந்தாலும் சொப்ட்வெயர் துணையோடு தனது விஞ்ஞான கருத்துகளை உற்சாகமாக உலகுடன் பகிர்ந்து கொண்டு வருகிறார். சமீபத்தில் ஹொகிங் அவுஸ்ரேலியாவின் சிட்னி ஓபரா அரங்கில் ஹோலோகிராம் வடிவில் உரை நிகழ்த்தினார். அதாவது பிரிட்டனில் உள்ள அவர் வசிப்பிடத்தில் இரண்டு கமெராக்கள் மூலம் அவர் பேசுவது படமாக்கப்பட்டு, அந்தக் காட்சி சிட்னியில் ஹோலோகிராம் வடிவில் தோன்றியது.

ஹொகிங்கின் மகள் லூசி இந்த உரைக்கான அறிமுகத்தை செய்து வைத்தார். இந்த உரையின் போது அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்குள் நாம் வேற்றுக் கிரகங்களில் வசிப்பதற்கான வாய்ப்பை தேடிக்கொள்ளாவிட்டால் மனித குலம் அழிந்துவிடும் என்றும் ஹொகிங் எச்சரித்தார்.

பின்னர் ஹொகிங்கிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. அதில் ஒன்று, இளம் பாடகர் ஜயான் மாலிக், ஒன் டைரக்‌ஷன் குழுவை விட்டு விலகி உலகம் முழுவதும் உள்ள இளம் பெண்களை கண்ணீர் சிந்த வைத்ததன் கொஸ்மோலொஜிகல் விளைவு என்னவாக இருக்கும் என்பதாகும்.

விஞ்ஞானியிடம் கேட்க வேண்டிய கேள்வியா இது என்று நீங்கள் கேட்கலாம். ஆனால், ஹொகிங் இந்தக் கேள்விக்கு அளித்த பதில் தான் இன்னும் சுவாரசியமானது. கடைசியாக ஒருவர் முக்கியமான கேள்வியைக் கேட்டிருக்கிறார் என்று நகைச்சுவையாக குறிப்பிட்ட ஹொகிங், இந்தப் பெண்களுக்கு எனது ஆலோசனை, கோட்பாடு பௌதீகத்தைப் படியுங்கள் என்பதாகும் என்று கூறிவிட்டு, ஏனெனில் என்றாவது ஒரு நாள் இணையான பிரபஞ்சங்கள் இருப்பது நிரூபணமாகும். அப்போது நம்முடைய பிரபஞ்சத்துக்கு வெளியே இன்னொரு பிரபஞ்சம் இருப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் போகாது. அந்தப் பிரபஞ்சத்தில் ஜயான் மாலிக், ஒன் டைரக்‌ஷனில் இருந்து வெளியேறாமலே இருக்கலாம் என்று அதற்கான காரணத்தையும் விளக்கினார்.

இதைக் கேட்ட பின், ஜயான் மாலிக் பற்றிக் கூகுளிட தோன்றுகிறதோ இல்லையோ, இணையான பிரபஞ்சங்கள் பற்றி இணையத்தில் தேடிப்பார்க்க தோன்றும் அல்லவா? அதுதான் ஹொகிங்!

இந்த நிகழ்ச்சியில் கவனிக்கத்தக்க விஷயம் இன்னொன்றும் இருக்கிறது. நிகழ்ச்சிக்கான ரிக்கெற்கள் அனைத்தும் விற்றுத் தீர்ந்து அரங்கம் நிரம்பி வழிந்தது என்பது தான் அது. நம்மூரில் ஹொகிங் போன்றவர்கள் உரை நிகழ்த்த வந்தால் எப்படி இருக்கும், யோசித்துப்பாருங்கள்?

# அழகாக இருங்கள்....

♦ முகத்தில் உள்ள அழுக்கை அகற்ற, வெள்ளரிக்காய்ச் சாறுடன் பால் கலந்து பஞ்சைக் கொண்டு முகத்தில் கீழிருந்து மேலாக அழுத்தித் துடையுங்கள். முகத்தில் உள்ள அழுக்குகள் போய் முகம் பளபளவென்று இருக்கும்.

♦ கடலை மாவையும், கோதுமை மாவையும் சம எடையில் எடுத்து, அதைக் காய்ச்சிய பாலைக் கொண்டு விழுதாக்கி, முகம், கை, கால்களில் தடவிக் குளித்தால், அழகு கூடுவதோடு, அழுக்கிருந்தால் அதுவும் வெளியேறும்.

♦ வெட்டி வேரைக் காய வைத்துத் தூளாக்கி, ஒலிவ் எண்ணெயும் சேர்த்து நீருடன் கலந்து முகத்தில் தடவி வந்தால், முகத்திலுள்ள கரும்புள்ளிகள் காணாமல் போய்விடும்.

♦ பாசிப் பயறு மாவுடன், கஸ்தூரிமஞ்சள் மா, எலுமிச்சம் சாறு, சிறிது பால் ஆகியவற்றைக் கலந்து முகத்தில் தடவி, உலர்ந்தபின் கழுவினால், பூவாய் பொலிவோடு திகழும் முகம்.

♦ திராட்சைச் சாறையோ, வர்த்தகைப்பழச் சாறையோ படுக்கப் போகும் முன்பாக முகத்தில் தடவி, காலையில் கழுவினால், முகம் மென்மையாகும்.

♦ எருமைப்பாலின் ஏடை எடுத்து இரவு படுக்கைக்கு முன் முகத்தில் தடவி, காலை கடலை மா அல்லது சவர்க்காரம் போட்டு கழுவ, முகம் கண்ணாடியாய் மின்னும்.


♦ சிறிதளவு இளநீரோடு, தேவையான அளவில் பால், சந்தனம் சேர்த்துக் குழம்பாக்கி, இருபது நிமிடம் முகத்தில் பூசி இருந்து, பின் கழுவிப் பாருங்கள், பளபளப்பாக இருக்கும்.

♦ உருளைக்கிழங்கு சாறு இரண்டு தேக்கரண்டி, ஒரு தேக்கரண்டி கடலை மாவையும் கலந்து முகத்தில் தடவி, அது உலர்ந்தபின் கழுவிப் பாருங்கள், முகப் பொலிவோடு இருப்பீர்கள்.

♦ காலையில் எழுந்ததும் ஒரு சொட்டு நல்லெண்ணெயுடன் இரண்டு, மூன்று சொட்டு குளிர்ந்த நீர் சேர்த்து முகத்தில் தேய்த்து வந்தால், முகம் பளிச்சென்று ஒளிரும்.



# வரிக்குதிரை வதக்கல் வேண்டுமா?



- நடேசன் -

**2005** இல் தென்னாபிரிக்காவில் எடுக்கப்பட்ட ஒரு ஹொலிவூட் படம் ரேசிங் வித் ஸ்ரைப்பிஸ் (Racing with stripes). மிருகங்களைப் பேசவைத்து குழந்தைகளுக்காக எடுக்கப்பட்ட இத்திரைப்படத்தில் குதிரைகள், சேவல்கள், ஆடுகள் முதலானவை தோன்றின. இத்திரைப்படம் ஒரு இளம் வரிக்குதிரையையும் அதன் மீது பாசம் கொண்ட தாயற்ற இளம் பெண்ணையும் முக்கிய பாத்திரங்களாகக் கொண்டது.

சூறாவளி திடீரென்று மையம் கொண்டதால் அவசரம் அவசரமாக தாங்கள் தங்கிய இடத்தில் இருந்து மூட்டை முடிச்சுகளுடன் புறப்பட்டுச் செல்கிறது ஒரு சர்க்கஸ் குழு. அந்தக் குழு அவசரத்தில் ஒரு சிறிய வரிக்குதிரைக் குட்டியை அங்கு அனாதரவாக விட்டுச் சென்று விட்டன.

அந்த வரிக்குதிரைக்குட்டி ஓட்டப்பந்தயக் குதிரைகளை பழக்கும் நோலனால் கண்டெடுக்கப்பட்டு அவரது பண்ணை வீட்டிற்கு எடுத்து செல்லப்படுகிறது. அங்கு ஏற்கனவே பல குதிரைகள் வளர்க்கப்படுகின்றன.

அந்தச் சிறிய வரிக்குதிரைக் குட்டியை நோலனின் மகள் சானிங்கிங் ஸ்ரைப்பி என்ற பெயரிட்டு பாசமுடன் வளர்க்கிறாள். அங்கு ஏற்கனவே வளரும் பந்தய குதிரைகளுக்கு ஸ்ரைப்பியை பிடிப்பதில்லை. பொறாமையுடன் எதிர்க்கின்றன. ஆரம்பத்தில் பந்தயக் குதிரைகளால் ஏளனம் செய்யப்படும்போது அதனை சவாலாக எடுக்கும் ஸ்ரைப்பி ரேஸ் ஓட நினைக்கிறது. ஆனால் தோற்கிறது. இறுதியில் சானிங்கின் வற்புறுத்தலில், நோலனால் பயிற்றுவிக்கப்பட்டு கெந்தக்கி ரேஸ் என்ற மிக பிரசித்தியான குதிரைப் பந்தயத்தில் வெல்கிறது.

இந்தப்படத்தை ஏற்கனவே பார்த்திருந்ததால் தென்னாபிரிக்கப் பயணத்தில் வரிக்குதிரைகளைப் பார்த்தபோது அந்தத் திரைப்படம் ஞாபகம் வந்தது. சிம்பாப்வேயில் சஃபாறியில் சென்றபோது மாலை உணவுக்காக நடுக்காட்டில் வாகனத்தை நிறுத்திய இடத்தில் இரண்டு வரிக்குதிரைகள் மிக அருகில் வந்து நின்றன.

"வரிக்குதிரைகளை யாராவது பிரயோசனப் படுத்தியதாக தகவல் உள்ளதா?" என்று எமது வழிகாட்டியை கேட்டேன்.

"அவற்றில் ஏறி குதிரைபோல் சவாரி செய்ய முயற்சித்தார்கள். ஆனால் அவற்றின் முள்ளந்தண்டு எலும்புகள் குதிரைபோல் உறுதியானவையல்ல. மற்றும்படி அதற்கு பயிற்சி கொடுப்பது கடினமில்லை" என்றான்.

ஆனால் ஐரோப்பாவில் வெள்ளை வரிக்குதிரைகள் பயந்த சுபாவம் கொண்டவை என்பதனால் வரிக்குதிரையை குதிரையுடன் இனப்பெருக்கம் செய்து வண்டியோட்டவும் சவாரி செய்யவும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முயற்சி செய்தார்கள்

நான் பார்த்த வரிக்குதிரைகள் எல்லாம் சோடியாகவே காட்டில் நின்றன. நான் அருகில் சென்று பார்க்க முயற்சித்தபோது ஆண் - பெண் வித்தியாசம் பெரிதாக வெளியே தெரியவில்லை. அருகில் நெருங்கிப் பார்த்தபோது பெண்உறுப்பு பின்பகுதியில் தெரிந்தது. ஆணின் குறி குதிரைக்கு இருப்பது போன்று பெரிதாகத் தெரியவில்லை. ஆண் வரிக்குதிரை பெண் வரிக்குதிரையிலும் சற்றுப் பெரிதாக இருந்தது.

வரிக்குதிரையின் கோடுகள் எப்பொழுதும் வியப்பானவை. இடது வலது பகுதிகள் கண்ணாடி விம்பம்போன்று இருக்குமென நினைத்தேன். ஆனால் அப்படி இருக்கவில்லை. வேட்டையாடும் மிருகங்களின் கண்களில் இருந்து தப்புவதற்காக இந்தக்கோடுகள் அமைந்திருப்பதாக கருதப்படுகிறது. மேலும் விலங்குகள் குறித்து படித்தபோது கறுப்புக்கோட்டில் நுண்ணிய இரத்தக்குழாய்கள் செறிந்தும் வெள்ளைக்கோட்டில் குறைந்தும் இருப்பதால் அதன் உடலின் வெப்பம் சீராக்கப்படலாம் என நம்பப்படுகிறது. மேலும் இந்தக் கோடுகளின் தன்மையால் ஒட்டுண்ணி பூச்சிகளின் தாக்கம் குறைவதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தக் கோடுகள் எங்களது கைரேகை போல் தனித்தன்மையானவை.

வரிக்குதிரைகள் குதிரைகளைப்போல் நடக்கும் ஓடும் பாயும். குதிரைபோல் வேகமாக ஓடாதபோதிலும் அதிக தூரம் ஓடுவதற்கான பலம் கொண்டவை. மேலும் எதிரியிடம் இருந்து தப்பிக்க குறுக்கு மறுக்காக ஓடக்கூடியது. மேலும் முன்னங்கால்களால் எழுந்து தாக்கும் தன்மை, இவற்றை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கின்றன.

தெளிவான செவிப்புலனும் கூர்மையான பார்வையும் கொண்டது மட்டுமல்லாமல் இரவில் இருட்டில் கூர்ந்து பார்க்கக்கூடிய திறனும் இருப்பதனால் இவை வேட்டை மிருகங்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்கின்றன.

குதிரையைப்போல் நின்றபடியே உறங்கும் தன்மையும் வரிக்குதிரைக்குண்டு. வரிக்குதிரையை பறவைகள் பபூன்கள் அதனைச்சுற்றி இருக்கும் பிரதேசங்களிலேயே கண்டேன். அதன் காரணம் இவை பொது எதிரி வரும்போது சத்தமிட்டு வரிக்குதிரையை எச்சரிக்கின்றன.

காலம் காலமாக வரிக்குதிரையின் தோலின் கவர்ச்சியால் மனிதர்கள் அவற்றை வேட்டையாடுகிறார்கள்.

குருகர் காட்டில் பல தடவை வரிக்குதிரைகளை பார்த்துவிட்டு ஜோகன்ஸ்பேர்க்கில் மிகவும் பிரசித்திபெற்ற காணிவொரூஸ் என்ற பிரபலமான அசைவ உணவகம் சென்றேன். அங்கு கிட்டிய அனுபவம் புதியது. அங்கு பெரும்பாலும் மான் இனங்கள், வரிக்குதிரை மற்றும் முதலை முதலானவற்றின் வதக்கிய இறைச்சியை பரிமாறினார்கள். மேசையில் இருந்து உணவருந்தும் போது இரும்புக்கம்பியில் ஆட்டையும் மாட்டையும் குத்தி வாட்டிய இறைச்சியை கொண்டு வந்தபோது என்னால் சுவைக்க முடிந்தது. மான் வகைகள் வந்தபோது மறுத்தேன். கடைசியில் மிகவும் பெரிய தொடையொன்றை பரிசாரகர் கொண்டுவந்தபோது, என்ன? என்று கேட்டேன்.

"வரிக்குதிரை" என்றார்.

அப்போது ஏற்கனவே உண்ட ஆடும் மாடும் வெளியே வருவதான உணர்வு வரவும், அந்த உணவு விடுதியின் பாத்ரூம் நோக்கிச் சென்றேன்.

ஆட்டையும் மாட்டையும் உணவாக ஏற்க முடியுமானால் - ஏன் வரிக்குதிரையின் மாமிசத்தையும் உண்ணமுடியாது?

எல்லாம் பழக்கதோசம்தான்.

# இயற்கையை எதிர்க்கும் மனிதர்!



**இ**யற்கைக்கு எதிராக மனிதன் செயல்படும் போது, அது, அவனை, "பொட்" என்று தலையில் குட்டியது போன்று ஒவ்வொரு முறையும் பாடம் கற்பிக்கிறது. ஆனாலும், மனிதன் திருந்துவதில்லை! இப்படித்தான் இங்கிலாந்தில் நடந்தது...

இங்கிலாந்து நாட்டு பசுமாடுகளை, தொலைக்காட்சிகளில் பார்த்து இருப்பீர்கள்... கொழு கொழுவென இருக்கும் 30 - 40 லீற்றர் பால் கொடுக்கும். ஆனால், அதற்கு மேலும் அதிகமாக பால் கொடுக்க வேண்டும் என பேராசைப்பட்டு, இதற்கென ஆராய்ந்து, மாட்டு எலும்புத் தூள் கலந்த விசேஷ உணவைத் தயாரித்தனர். தாவர பட்சிணியான மாட்டுக்கு, இவ்வுணவைக் கொடுத்ததன் விளைவு, பால் மற்றும் இறைச்சி அதிகமாக கிடைத்தது என்றாலும், ஒரு கட்டத்தில் மாடுகளுக்கு பைத்தியம் பிடித்து விட்டது. இதை, Mad Cow Disease என்பர்.

இந்நோய் பீடித்த மாடுகளை, சில ஆண்டுகளுக்கு முன் இலட்சக்கணக்கில் கொன்று எரித்தனர்.

இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாட்டை ஆட்டிப் படைப்பது, "கா வா" நோய் எனப்படும், Foot and Mouth நோய். நம் நாட்டில், இந்நோய் கண்ட மாடுகளை தனியே பிரித்து, விளக்கெண்ணெயும், மஞ்சளும் தடவி வருவர். இந்நோய் கண்ட மாடுகள், உணவு எடுத்துக் கொள்ளாது என்பதால், மூங்கிலை வாயில் நுழைத்து, அரிசிக் கஞ்சி ஊற்றுவர். 10 நாட்களில் நோய் ஓடிப் போகும்.

ஆனால், இங்கிலாந்திலோ, இந்நோய் கண்ட, ஆடு, மாடுகள் ஒன்றல்ல, இரண்டல்ல, ஏழு இலட்சத்தை கொன்று குவித்துள்ளனர்.

உணவுக்காக கால்நடைகளை வளர்ப்பதும், அதற்கு வியாதிகளை வரவழைத்து, பின்னர் இலட்சக்கணக்கில் கொல்வதும் என்று முடிவுக்கு வருமோ!

# மூக்குக் கண்ணாடி பராமரிப்பு!



★ மூக்குக் கண்ணாடிகளை உபயோகப்படுத்தாத நேரங்களில் அதன் உறையில் போட்டு வைத்திருக்க வேண்டும். அது முடியாவிடில் கண்ணாடி பாகம் மேசை மீது படாதவாறு வைக்க வேண்டும்.


★ மூக்குக் கண்ணாடியை கழற்றும் போது இரண்டு கைகளாலும் கண்ணாடியின் விளிம்பில் இணையும் இடத்தில் பிடித்து கழற்ற வேண்டும். ஒருகையால் கழற்றும்போது கண்ணாடி பிரேம்கள் வளைந்து போகவும் உடைந்து போகவும் வாய்ப்புகள் உள்ளன.

★ மூக்குக் கண்ணாடியை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். உபயோகப்படுத்து முன் ஒவ்வொரு முறையும் மென்மையான துணியால் நன்கு துடைக்க வேண்டும்.

★ மூக்குக் கண்ணாடிகளை அவ்வப்போது சரி பார்த்துக் கொள்ள வேண்டும். இணைப்புகள் தளர்ந்துவிடாமல் முகத்தில் சரியாக பொருந்தும்படி செய்து உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

★ ஒருவரது மூக்குக் கண்ணாடியை மற்றவர் உபயோகப்படுத்தக் கூடாது. இதனால் அளவுகள் மாறி உரியவர் அணியும்போது பொருந்தாமல் அசௌகரியம் ஏற்படுத்தும்.

# புதுவகை 'சென்ட்'!



**வெ**யில், வியர்வை, நாற்றம். நாற்றத்தைப் போக்க சென்ட். சென்ட் என்றால் நன்றாக மணக்கும் என்றுதானே நினைக்கிறீர்கள்? லண்டனில் ஒரு புதிய ரக சென்ட்டைத் தயாரித்திருக்கிறார்கள். அந்த சென்ட்டுக்கு வாசனை எதுவும் கிடையாது. ஆனால் உடலில் வழியும் வியர்வையுடன் கலந்ததும் வாசனை வந்துவிடுமாம்.

அந்த சென்ட் அயனித் திரவம் என்ற பொருளால் தயாரிக்கப்படுகிறது. இந்த அயனித் திரவம் நீராவியுடன் இணையும்போது வேதியல் மாற்றம் அடைந்து நறுமணத்தை வெளிப்படுத்தும். உடலில் வெப்பம் அதிகரிக்கும்போது உண்டாகும் நீராவியுடன் இந்த சென்ட் கலந்து வாசனையை ஏற்படுத்துகிறதாம்.

வியர்வை நாற்றமடிக்கக் காரணம் அதில் உள்ள தியோல் என்கிற பொருள்தான். இந்த சென்ட் அந்தத் தியோலின் அளவைக் குறைத்துவிடுவதால் வியர்வை நாற்றம் குறைந்துவிடுகிறதாம்.

# புதிர்ப்போட்டி இல. 41

அனுப்பவேண்டிய முகவரி
புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும். அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் திகைப்பக்கோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.

## பொதுஅறிவு வினாக்கள்

01)உலகில் உள்ள பறவைகளில் மிகப்பெரியது எது?
1)கோழி 2) தீக்கோழி
3)மயில் 4) மைனா

02)வெறும் கண்களால் பார்க்க முடியாத கோள்?
1)புதன் 2) வியாழன்
3)யுரேனஸ் 4) சனி

03)ஜப்பானின் தலைநகர்?
1) சிக்காக்கோ 2) டில்லி
3) கனடா 4) டோக்கியோ

04) பாம்பு எதன் மூலம் வாசனையை உணர்கிறது?
1) தோல் 2) கண்
3) நாக்கு 4) மூக்கு

05) திரை அரங்குகளே இல்லாத நாடு?
1) பாகிஸ்தான் 2) பூட்டான்
3) சவுதி அரேபியா 4) சோமாலியா

06) உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம்?
1) யானை 2) பாம்பு
3) சிங்கம் 4) முதலை

07) எந்தக் கண்டத்தில் கங்காரு, பனிக்கரடி உள்ளது?
1) கனடா 2) அமெரிக்கா
3) அவுஸ்ரேலியா 4) சீனா

08) நள்ளிரவு சூரியன் உதிக்கும் நாடு ?
1) சுவீடன் 2) பிரான்ஸ்
3) இங்கிலாந்து 4) நோர்வே

09) உலகிலேயே உயரமான சிகரம் ?
1) எவரெஸ்ட் 2)இமயமலை
3) சகாரா 4) சிவனொளிபாதமலை

10) மரத்தின் கிளைகளிலிருந்து வேர்களைத் தோற்று விக்கும் தாவரம்?
1) அரசமரம் 2) வேம்பு
3) ஆலமரம் 4) வில்வமரம்

## சின்னச்சின்ன துளிகள்

* ரங்கன்திட்டு பறவைகள் சரணாலயம் உள்ள இடம் - கர்நாடகா
* குருதேவ் என்று அழைக்கப்படுபவர் - ரவீந்திரநாத் தாகூர்
* இந்தியாவின் முதுபெரும் மனிதர் - தாதாபாய் நவுரோஜி
* இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் வந்த சீனப்பயணி - பாஹியான்
* அக்னி, பிருத்வி ஏவுகணைகளை வடிவமைத்தவர் - ஏ.பி.ஜே.அப்துல்கலாம்
* இந்தியாவில் உள்ள இளஞ்சிவப்பு நகரம் - ஜெய்ப்பூர்
* புயலடிக்கும் நகரம் என்று அழைக்கப்படுவது - சிகாகோ
* டி.என்.ஏ.வை ஒட்ட வைக்க பயன்படும் நொதி - லிகேஸ் நொதி
* முதன் முதலில் வைரசைக் கண்டறிந்தவர் - பெய்ஜரிங்க்.
* அலாவுதீன் கில்ஜியின் அரசவைப் புலவர் - அமீர் குஸ்ரு
* பஞ்சாபில் நடக்கும் ஒருவகை நடனம் - பாங்கரா
* இந்தியாவின் மிகப்பெரிய வணிக வங்கி - எஸ்பிஐ
* ஹைட்ரஜன் குண்டு தயாரிப்பில் பயன்படும் தத்துவம் - அணுக்கரு இணைவு
* திட்டமிட்டு வனங்களை ஏற்படுத்துவதன் பெயர் - சில்விகல்ட்சர்
* தடுப்பூசி முறையை முதலில் செய்து காட்டியவர் - எட்வர்ட் ஜென்னர்

## சென்றவார விடைகள்

01. : 1. ஆ 2. இ 3. இ 4. இ 5. இ 6. ஈ 7. அ 8. இ 9. ஆ 10. ஆ

## விடுகதைகள்

01.மணம் இல்லாத மல்லிகை மாலையில் மலரும் அது என்ன?

02.அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரம் அது என்ன?

03.மண்ணுக்குள் இருக்கும், மங்கைக்கு அழகு தரும் அது என்ன?

04.இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன?

05.உடம்பெல்லாம் சிவப்பு, அதன் குடுமி பச்சை அது என்ன?

06.ஓயாமல் இரையும் இயந்திரமல்ல, உருண்டோடிவரும் பந்து அல்ல அது என்ன?

07.சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது அது என்ன?

08.மழை காலத்தில் பிடிப்பான் அவன் யார்?

09.எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது, அது என்ன?

10.வீட்டிலிருப்பான் காவலாலி, வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி, அவர்கள் யார்?

11.ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன?

12.கடலில் கலக்காத நீர், யாரும் குடிக்காத நீர் அது என்ன?

13.அனைவரையும் சொக்க வைப்பான் அவன் யார்?

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் நான்கு சொற்கள் ஒரு பொதுவான விதியைப் பின்பற்றியு ள்ளன மாறுபட்ட சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக

01.ஒன்று, இரண்டு, மூன்று, எட்டு, பத்து

02.பட்டர், மாஜரீன், பாண், ஜாம், பழம்

03.காலி, கொழும்பு, கண்டி, திருகோணமலை, ஊர் காவற்றுறை

04.துரியோதனன், சயந்தன், துச்சாதனன், அபிமன்யு, இராவணன்

05.மல்லி, மிளகாய், கடுகு, கறிச்சரக்கு, மஞ்சள்தூள்

06.மகன், மகள், மருமகன், மச்சான், அண்ணா

07.கீரை, மீன், அவரை, இறைச்சி, பால்

08.பருத்தி, கம்பளி, துணி, பட்டு, செயற்கைநார்

09.அன்னம், பறவை, சாதம், அமுது, அடிசில்

10.சென்றால், போனால், இரங்கினால், ஏசினால், கழிந்தால்

11.யாதும் ஊரே யாவரும் கேளீர் - கேளீர் என்பதன் பொருள்
அ)பிறர் ஆ)கேளுங்கள்
இ)வீரர் ஈ)உற்றார்

12.யானை, சிங்கம், புலி, காண்டாமிருகம், கரடி

13.மில்லிகிராம், சென்ரிகிராம், மில்லிலீற்றர், கிலோகிராம், சென்ரிமீற்றர்

14.கிராமம், கிராமோதயசபை, பிரதேசசபை, மாவட்டசபை, நகரசபை

15.கொழும்பு, எகிப்து, டில்லி, பீக்கிங், டோக்கியோ

16.குரக்கன், வாழை, கோதுமை, நெல், கேழ்வரகு

கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

01.மணிக்கூடு ஒன்று அரைமணிக்கு ஒன்றும் ஒரு மணிக்கு ஒன்றும் இருமணிக்கு இரண்டுமாக அடித்தால் ஒரு நாளைக்கு எத்தனை தரம் அடிக்கும்?

02.1ஆவது இலக்கம் 8,2ஆவது இலக்கம் 11 ஆயின் 39ஆவது இலக்கம் யாது?

03.பெண்களிலும் பார்க்க 4 ஆண்கள் குறைவாக உள்ள வகையில் ஓர் ஆணுக்கு 30/= ஒரு பெண்ணுக்கு 20/= ஒரு குழந்தைக்கு 5/= என்ற அடிப்படையில் 1000/= இனை நூறு பேருக்கு மிகுதியின்றிப் பங்கிட்டால் எத்தனை குழந்தைகள் அதில் இடம் பெறுவர்?

04.நேற்று முதல் நாளுக்கு முதல் நாள் உதைப் பந்தாட்ட அரை இறுதிப்போட்டி முடிவடைந் துள்ளது இறுதிப்போட்டி நாளை மறுநாள் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது 22ஆம் திகதி புதன் கிழமையாகும் முதற்போட்டி என்ன நாளில் முடிந்தது?

05.தேவன், வாமன் ஆகிய இருவரும் ஒரே இடத்திலிருந்து வேலைத்தளத்திற்குச் செல்ல முறையே 20,30 நிமிடங்கள் எடுப்பர் தேவனிலும் 5 நிமிடம் முன் வாமன் அதே தூரத்தைச் சென்ற டையப் புறப்பட்டானாயின் வாமன் இருந்த இடத் திற்கு தேவன் சென்றடைய எவ்வளவு நேரம் எடுக்கும்?

06.இலங்கையின் 166 புகையிரத நிலையங்கள் உள்ளன எந்த ஒரு நிலையத்திலும் இருந்து வேறு எந்த நிலையத்திற்கும் செல்வதற்கு ரிக்கற் பெற முடியுமாயின் ஒரு நிலையத்தில் ஆகக் கூடுதலாக எத்தனை வகையான ரிக்கற்றுக்கள் இருக்கும்?

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- தா.நிருசிகா
தரம் :- 12
பாடசாலை :- யா /சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

பெயர் :- ம.திவிகா
தரம் :- 09
பாடசாலை :- யா /உடுவில் மகளிர் கல்லூரி

பெயர் :- க.உதயன்
தரம் :- 10
பாடசாலை :- யா /மத்திய கல்லூரி

பெயர் :- ப.மதுசன்
தரம் :- 09
பாடசாலை:-யா/மத்திய கல்லூரி

பெயர் :- கா.புஸ்பிகா
தரம் :- 12
பாடசாலை:-யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

### விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ..................
பாடசாலை :- ..................
கல்வி கற்கும் தரம் :- ..................
வீட்டு முகவரி :- ..................
தொ.பேசி இலக்கம் :- ..................

# சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களின் விடுதலை செய்யப்படாமை கவலைக்குரியது

## - சந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு -



நீண்டகாலமாக சிறையில் வாடும் தமிழ் இளைஞர்கள் இது வரை விடுதலை செய்யப்படாமை வேதனைக்குரியது என "நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

சரத்பொன் சேகாவிற்கே பொது மன்னிப்பு வழங்கிய அரசாங்கம் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக சிறையில் வாடும் தமிழ் இளைஞர்களை இதுவரை விடுவிக்க முயற்சி எடுக்க வில்லை என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். விவேகானந்த நகர் மக்களைச் சந்தித்து கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் நேற்றுமுன்தினம் அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்.

கடந்த யுத்த காலத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாக சிறையில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதற்கு இன்றுவரை எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அதற்கென விசேட குழு ஒன்றை நியமித்து அந்த குழுவின் செயற்பாடுகளின் அடிப்படையில் இரண்டு வார காலத்திற்குள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென நாடாளுமன்றில் நீதியமைச்சர் குறிப்பிட்டார். அவர் அவ்வாறு குறிப்பிட்டு இரண்டு மாதங்களைக் கடந்த நிலையிலும் இன்றுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

பல்வேறு குற்றச்சாட்டின் பேரில் சிறையில் அடைக்கப்பட்ட சரத்பொன்சேகா வினைக்கூட விடுதலை செய்து அவருக்கு பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டுள்ள நிலையில் சாதாரணமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை அதுமட்டுமன்றி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இவ் இளைஞர்களில் பலர் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்படாத நிலை அல்லது நீண்ட காலத்திற்கு ஒரு தடவை மட்டுமே அவர்களின் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் நிலையே தொடர்கின்றது. இவ்வாறு சிறையில் வாடும் இளைஞர்களின் குடும்பங்கள் சட்டத்தரணிகளுக்கு காசுகட்டியே இன்றும் வறுமைக் கோட்டுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் தேர்தல் காலத்தில் இவர்களின் விடுதலை விரைவில் உறுதிப்படுத்தப்படும் என குறிப்பிட்டு தமிழர்களின் வாக்குகளை பெற்றுக் கொடுத்தவர்கள் கூட இவ் விடயத்தில் அதிக அக்கறை காட்டவில்லை மாறாக அதற்கான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றே அவர்களும் கூறிவருகின்றனர். என நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் குறிப்பிட்டுள்ளார்.

இக்கலந்துரையாடலில் யுத்த காலத்தில் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விடுதலை குறித்தும் மற்றும் வீதிகளின் புனரமைப்பு பிரதேசசபையினரின அசமந்தபோக்கு உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதில் விவேகானந்த நகரைச்சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

# வேகமாக பயணித்த வாகனம் தலைகீழாகப் புரண்டது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின், பரந்தன் முல்லை வீதியில், தேராவில் குளத்துக்கருகில் வாகனம் ஒன்று நேற்றுகாலை தலைகீழாக புரண்டது. வீதியின் வளைவில் குறித்த வாகனம் ஆனது இரும்புக் கம்பியிலான விளம்பர பலகையோடு மோதி, அந்த கம்பியை முற்றாக உடைத்து தலைகீழாக புரண்டுள்ளது. இந்த வாகனத்தில் மூவர் பயணித்துள்ளனர். ஒருவருக்கும் எந்தச் சேதமும் இடம் பெறவில்லை. மூன்று மாதங்களுக்கு முன்னர் குளத்தின் மறுபக்க வீதியில் இது போலவே ஒரு வாகனம் தலைகீழாக புரண்டமை குறிப்பிடத்தக்கது. (160)

# வருடாந்த மஹோற்சவம்

தென்கோவை அருள் மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இதில் எதிர்வரும் யூன் மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 11ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.மகோற்சவ பிரதம குருவாக கற்பக விநாயக கிரியா உபாசகர் சிவஸ்ரீ பா.செல்வசேனக் குருக்கள் செயற்படுவார். மஹோற்சவ தினங்களில் தினசரி காலைப் பூஜை காலை 8 மணிக்கும் மாலையில் 5 மணிக்கும் ஆரம்பமாகும்.

# தென்னங்கன்றுகள் வழங்கி வைப்பு

(மன்னார்)

ஒலுமடு கிராம சேவையாளர் பிரிவுக்கு தென்னை ஆராய்ச்சி நிலையத்தினால் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

ஒலுமடு கிராம சேவக பிரிவில் போரின்போது அழிவடைந்த பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்கும் முகமாக ஒரு பயனாளிக்கு ஒரு ஏக்கருக்கு 64 தென்னங்கன்றுகள் மானியமாக தென்னை ஆராய்ச்சி நிலையத்தினால் பயனாளிகளுக்கு வைபவ ரீதியாக வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள 354 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் ரி.குணபாலன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட காணி யில்லாத 354 பேருக்கு காணி அனுமதிப் பத்திரம் வைபவ ரீதியாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வன் அடைக்கலநாதன் கலந்து வழங்கி வைத்துள்ளார்.

இதற்கு பிரதம அதிதியாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் விநோதராதநோதலிங்கம் துணுக்காய் பிரதேச சபைத் தவிசாளரும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# நிறுத்தப்பட்டுள்ளது பத்திரிகையாளர் மாநாடு

யாழ்.வணிகர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பத்திரிகையாளர் மாநாடு தவிர்க்கமுடியாத காரணத்தினால் நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.வணிகர் கழக பணிமனையில் நடைபெற இருந்தது.

அத்துடன் நிறுத்தல் அளவைகள் சம்பந்தமாகவும், கட்டுப்பாட்டு விலைகளில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள் சம்பந்தமாகவும் வர்த்தகர்கள் அறிந்து கொள்வதற்காகவே இம் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# வாரம் ஒரு காரம்

## "புலம் பெயர்ந்தவர்களில் சிலர் தற்போதும் ஈழக்கனவுடன்" அனுமதிக்க முடியாது என்கிறார் ஜனாதிபதி



நாட்டை விட்டு புலம்பெயர்ந்து வாழ்பவர்களில் சிலர் தற்போதும் ஈழக்கனவுடன்தான் செயற்பட்டு வருவதாகவும் எனினும் அவர்களின் கனவை நிறைவேற்ற வாய்ப்பளிக்க முடியாதெனவும், இந்த நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையெனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வெலிகந்த பாதுகாப்புப் படைத் தலைமையகத்தை கடந்த 24ஆம் திகதி பார்வையிடச் சென்ற ஜனாதிபதி அங்கு பேசும் போது இவ்வாறு தெரிவித்தார். இலங்கை இராணுவத்தினர் தொடர்பில் நம்பிக்கையோடு செயற்படுவதாக தெரிவித்த ஜனாதிபதி அவர்களின் கௌரவம் பாதுகாக்கப்படும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் பிரித்தானியாவின் தலைநகர் லண்டனில் 18 மே 2015 இல் தமிழ்த்தேசிய துக்க நாள் கவனயீர்ப்பு நிகழ்வு இடம்பெற்றது. "இதில் இலங்கையை அனைத்துலக குற்றவியல் நீதி மன்றில் நிறுத்துவதில் தங்களின் உறுதிப்பாட்டினை மக்கள் ஆர்வத்துடன் வெளிப்படுத்தினர்" என நாடு கடந்த தமிழீழ அரசாங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். எம்பாக் மென் தொடருந்து நிலையத்தில் இருந்து கவனயீர்ப்பு ஊர்வலமாக தொடங்கி பிரித்தானியாவின் பிரதமர் டேவிற் கமரூன் வாசஸ்தலமான டவுனிங் வீதிக்கு முன்பாக ஒன்றுகூடலும் இடம்பெற்றிருந்தது.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும் போது மகிந்த அரசைவிட புலம்பெயர் தமிழர் விடயத்தில் மைத்திரியரசு கடும் போக்கில் இருப்பது தெளிவாகின்றது. இனவாதம் என்பது மீண்டும் இங்கிருந்து விஸ்வரூபம் பெறுமா என்பதும், பத்தவைத்துவிட்டு பதுங்கியிருக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பை புலம்பெயர் தமிழர்கள் இனம் காண்பார்களா?.. என்பதும் இன்று சிக்கலிற்குரிய வினாக்களாக பலரை சிந்திக்க வைக்கின்றது.

அன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புலம்பெயர் தமிழர்களைத் தூண்டிவிட்டு இனவாத இன்னல்களைத் திட்டமிட்டு உருவாக்கியவர்கள் இன்று மைத்திரியரசுடன் மண்டியிட்டு இருக்கின்றார்கள். அன்று அரசியல் சுயலாபங்களிற்காக இனவாத இன்னல்களைத் தூண்டியவர்களிற்கு இன்று அது தேவையற்று இருக்கின்றது. ஆனால் இனவிடுதலை இன அழிப்பு என்பதை இதயத்தில் சுமந்த புலம்பெயர் மக்களால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பைப் போல் சந்தர்ப்பவாதிகளாக மாறமுடியவில்லை.

அன்று கூட்டமைப்பை நம்பிய விடுதலைப்புலிகள் இன்று உயிரோடிருந்தால் முதல் குறிவைக்கும் குற்றவாளிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத்தான் இருக்கும். நடந்த குற்றங்களிற்கு புலம்பெயர் தமிழர்கள் நாளடைவில் தேட நினைக்கும் தீர்வுகள் நாளை வர இருக்கும் இணக்கங்களை சீர்குலைக்குமா என்பது ஒரு வினாவாக இருந்தும் கூட அதை விழுங்குகின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

அன்றும் சுயலாப அரசியல் சுருண்டுவிடும் என்பதற்காக விடுதலைப்புலிகளிற்கு தலையாட்டியவர்கள் இன்று புலம் பெயர் தமிழர் நிதிக்காக புத்துப்பாம்பாக பொத்திக்கிட்டு இருக்கின்றார்கள்.

அன்று சர்வதேச நாட்டிற்கான மகிந்தவின் வரவிற்கு எதிர்ப்புத் தெரிவியுங்கள் என புலம்பெயர் தமிழரைக் கோரிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இன்று மைத்திரியை ஆதரியுங்கள் எனக்கோருகின்றது. ஆனால் ஆழத்தில் அழிவுகளின் வலிகளைச் சுமந்தவர்கள் அரசியல் வாதிகளைப் போல் மாறமுடியவில்லை. இதுவே இன்றைய புலம் பெயர் தமிழர்களிற்கும் கூட்டமைப்பிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களாகும்.

ஆனால் அதையும் வெளிக்காட்டாமல் அன்று ஆட்டிய தலையைப் போல் இன்றும் ஆட்டுகின்றனர். காரணம். காசு!! அன்று சுயலாப அரசியலுக்காக ஆடியது தலை.... இன்று காசுக்காக ஆடுகின்றது தலை.... நாளை....?

- வெண்கட்டியன்

# இலவச மின் இணைப்பு விடயத்தில் தடையாக இருப்போர் யார்?

## ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா

மீள் குடியேற்றப் பகுதிகளில் இலவச மின் இணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்வதில் தடையாக இருக்கும் சக்திகள் யாவை? என ஈ. பி டி. பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள பகுதிகளில் இலங்கை மின்சார சபை இலவசமான மின் இணைப்புக்களை வழங்கி வருகிறது. கடந்த காலங்களில் நாம் முன்னின்று இப் பணிகளை மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றி வந்துள்ளோம். எனினும், தற்போது இலவச மின் இணைப்பு பெறுவதில் தடைகள் இருப்பதாக மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் முறைப்பாடுகளை முன்வைத்து வருகிறார்கள் எனத் தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா இதற்குத் தடையாக இருக்கும் சக்திகள் எவை என்பதை சம்பந்தப்பட்டவர்கள் அடையாளங்காட்ட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.



இவ்வாறு தடைகளை ஏற்படுத்துவோர் இனங்காணப்படும் பட்சத்தில், அவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி சபைகள் வலுப்பெற்று பயன்கள் மக்களைச் சென்றடைய வேண்டும்

வடக்கில் உள்ளூராட்சி சபைகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்துவருவது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அமைச்சர் கரு ஜயசூரியவுக்கும் எமது மக்கள் சார்பாக தனது நன்றியைத் தெரிவித் துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா குறைந்த வருமான முள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு போதிய நிதி ஒதுக்கீடுகளை செய்வதன் ஊடாகவே அச் சபைகள் சார்ந்த பகுதிகளின் அபிவிருத்திகளை எட்ட முடியும் என சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்டத்தைப் பொறுத் தமட்டில் ஒரு சில உள்ளூராட்சி சபைகள் ஓரளவிற்கு வருமானங்களை ஈட்டுகின்றன.

ஆனால், பல உள்ளூராட்சி சபைகள் மிகக் குறைந்த அளவிலான வருமானங்களையே ஈட்டக் கூடியதாக இருக்கின்றன. எனவே, இவற்றுக்கென விசேட நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள் ளப்படுவதுடன், வருமானங்களை ஈட்டக் கூடியதான வழிமுறைகளையும் உருவாக்க வேண்டும்.

அதே நேரம், ஒரு சில உள்ளூராட்சி சபைகள் வரி வசூலிப்புகளில் ஈடுபடுகின்ற போதிலும் உரிய வசதிகளை வரியிருப்பாளர்களுக்கு வழங்குவதில்லை.

குறிப்பாக, கொடிகாமம் பகுதியில் சந்தை மற்றும் முச்சக்கர வண்டிகள் தரிப்பிடம் போன்றவற்றிலிருந்து சாவகச்சேரி பிரதேச சபை வரி வசூலிக்கின்ற போதிலும், போதிய வசதிகளை வரியிருப்பாளர்களுக்கு வழங்குவதில்லை என்ற முறைப்பாடு நீண்ட காலமாகவே நிலவுகிறது.

எனவே, இவ்வாறான நிலைமைகளையும் போக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிரபராதி என்பதை நிரூபிக்க எந்த விசாரணைக்கும் தயார்

## சர்ச்சைக்குள்ளாகியுள்ள மத்திய வங்கி ஆளுநர் அறிவிப்பு



நிரபராதி என்பதனை நிரூபிக்க நிதி மோசடி விசாரணை பிரிவுக்கோ அல்லது எந்தவொரு சட்ட அமுலாக்கல் அமைப்பிற்கோ நேரில் செல்ல தயாரென திறைசேரி முறி விநியோக சர்ச்சைக்குள்ளாகியிருந்த மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தெரிவித்தார்.

நான் எந்தத் தவறும் செய்யவில்லை. எனது பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை அழிப்பதற்காக நான் எந்தவொரு சட்ட அமுலாக்கல் அமைப்புக்கு முன்னாலும் நேரில் செல்ல தயார். உச்ச நீதிமன்றம் எனது பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தை நீக்கியுள்ளது. அதேபோன்று ஏனைய விசாரணைகளும் உண்மையை வெளிப்படுத்தும்.

முறி விநியோக விவகாரம் தொடர்பில் சில கட்சிகள் எனது மருமகனையும் என்னுடன் இணைத்து குற்றம்சாட்டியிருந்தனர். உண்மையில் நான் மத்திய வங்கி ஆளுநராக பதவியேற்றதும் எனது மருமகன், குறித்த கம்பனியில் வகித்து வந்த பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியை இராஜினாமா செய்து விட்டார். முரண்பாடுகள் ஏற்படக்கூடாது என்பதற்காகவே அவர் அதனை செய்தார்.

மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட முன்னாள் அரசாங்கத்தின் உயர் மட்ட அதிகாரிகளுடன் எனது மருமகன் ஏதேனும் தொடர்புகளை வைத்திருந்தாரா என தான் அவர் எனது மகளை திருமணம் முடிப்பதற்கு முன்பே கேட்டிருந்தேன். அவ்வாறான தொடர்புகளை அவர் முற்றாக மறுத்திருந்தமை எனக்கு பூரண திருப்தியளித்திருந்தது. அவருக்கு கடந்த அரசாங்கத்துடன் கேள்விகள் எழுப்பக்கூடிய அளவு தொடர்புகள் இருக்குமென நான் நினைக்கவில்லை.

இதேவேளை மத்திய வங்கி ஆளுநரின் மருமகன் அர்ஜுன அலோசியஸ், முறி விநியோக விவகாரம் தொடர்பில் சர்ச்சைக்குள்ளான கம்பனியில் எவ்வித பங்குகளையும் கொண்டிருக்கவில்லை என்றும் மகேந்திரன் தெரிவித்தார்.

குறித்த கம்பனியில் எனது மருமகனின் சில குடும்ப அங்கத்தவர்கள் பங்குகளை கொண்டுள்ளனர். ஆனால் எனக்குத் தெரிந்த வரை அவருக்கு அந்த கம்பனியில் எவ்வித பங்குகளும் இல்லையெனக் கூறினார்.

# நிதிக்குற்றவியல் விசாரணைப்பிரிவு கலைக்கப்படமாட்டாது

## அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிப்பு



பாரியளவிலான நிதி மோசடிகள் ஊழல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் நிறுவப்பட்ட நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு கலைக்கப்பட மாட்டாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார.

இந்தப் பிரிவு எந்தவிதமான அரசியல் தலையீடுகளும் இன்றி சுயாதீனமாக செயற்பட சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை மற்றும் பொலிஸ மா அதிபர் அனுமதியுடன் இந்த நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. காலத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் சட்ட ரீதியாகவே இந்தப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து குற்றச் செயல்கள் குறித்து விசாரணை நடத்த மோட்டார் போக்குவரத்து பிரிவு, குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்த குற்ற விசாரணைப் பிரிவு உருவாக்கப்பட்டதனைப் போன்றே பாரியளவிலான நிதிக் குற்றச் செயல்கள் குறித்து விசாரணை நடத்த நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு சட்டவிரோதமான முறையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் ஊடாக நிறுவப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சா/த மாணவர்களின் அடையாள அட்டைக்கான

# 4 இலட்சம் விண்ணப்பங்கள் சீராக பூரணப்படுத்தப்படவில்லை

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இம்முறை தோற்றவுள்ள மாணவர்களின் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள், உரிய முறையில் கிடைக்கப் பெறவில்லை என ஆட்பதிவுத் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

சுமார் நான்கு இலட்சம் வரையான பரீட்சார்த்திகளின், தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்கள் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத பட்சத்தில் டிசம்பர் மாதமளவில் அடையாள அட்டைகளை விநியோகிப்பதில் சிரமம் ஏற்படலாம் என திணைக்களத்தின் ஆணையாளர் ஆர். எம்.எஸ். சரத்குமார தெரிவிக்கின்றார்.

ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதியன்று 16 வயதைப் பூர்த்திசெய்யும் பிள்ளைகளின் தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களை மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு ஆட்பதிவுத் திணைக்களம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

ஆயினும் சுமார் இரண்டு இலட்சத்து 25,000 வரையான விண்ணப்பங்களே கிடைத்துள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் சுட்டிக்காட்டுகின்றார்.

இதேவேளை, கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களில் அதிகளவான குறைபாடுகள் நிலவுவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

குறிப்பாக பல விண்ணப்பங்களில் பாடசாலை அதிபர்கள் கையொப்பமிட்டுள்ளபோதிலும், அவர்களின் உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருக்கவில்லை என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் கூறுகின்றார்.

இதுவரை சுமார் 2500 இற்கும் அதிகமான விண்ணப்பங்களில் குறைபாடுகள் நிலவுகின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக ஆணையாளர் ஆர்.எம்.எஸ். சரத்குமார மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# 2,175 குடும்பங்களை மீள்குடியேற்ற 160 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இடம்பெயர்ந்தவர்களுள் சுமார் 2 ஆயிரத்து 175 பேரை மீள்குடியமர்த்துவதற்காக 160 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்தவர்கள் - அனைவரையும் தமது ஆரம்ப இருப்பிடங்களில் மீள் குடியமர்த்துவதே அரசின் கொள்கையாகும். இந்த நோக்கத்தை வெற்றிகரமாக செய்துமுடிக்கும் நோக்கில் யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கிட்டத்தட்ட இடம்பெயர்ந்த 2,175 குடும் பங்களை மீள்குடியமர்த்துவதற்காக வேண்டி தேவையான வசதிகளைச் செய்துகொடுக்கும நோக்கில் 160 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்குவதற்காக மீள் குடியேற்றம், மீள் நிர்மாணம் மற்றும் இந்துமத விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.


அதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு ஆதரவளிப்பதற்காக பொறுப்புடனும், கணக்குக் கூறக்கூடிய விதத்திலும் அவற்றின் சேவைகளையும், உள்நாட்டு உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துவதற்கு அரசால் வடக்கு, கிழக்கு உள்நாட்டுச் சேவைகள் மேம்பாட்டுக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போதிருக்கும் கருத்திட்டம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள 65 பிரதேச சபைகள், 12 நகர சபைகள் மற்றும் 3 மாநகர சபைகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இவ் வேலைத் திட்டத்தின் மேலதிக வேலைகளைச் செய்து முடிப்பதற்காக - நிதியிடல் இடைவெளியை மூடுவதற்காக



இலங்கை அரசின் வேண்டுகோளுக்குப் பதிலளிக்கும் வகையில், மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்தை தொடர்வதற்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குச் சமமான தொகையொன்றை விசேட கடன் எடுப்பு உரிமையாகப் பெற்றுக் கொள்வதற்கு உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு நிதி அமைச்சர் ரவி கருணாநாயகவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

34. இவ்வாறான நான்கு தரையோடுகளை பொருத்தும் போது தோன்றக்கூடிய உரு எது?



35. இரண்டு மாம்பழங்களின் விலை 80ரூபா ஆகும். அப்பிள் ஒன்றின் விலை மாம்பழம் ஒன்றின் விலையிலும் 10ரூபா குறைந்தது எனின் 120ரூபாவிற்கு எத்தனை அப்பிள்கள் வாங்க முடியும்?
1) 4 2) 3 3) 6

36. தரப்பட்ட உருக்களில் இரண்டு ஏதா ஒரு விதத்தில் சமனானவை இதற்கிணங்க பொருத்தமில்லாத உருவின் கீழ் கோடிடுக?




37. வரதனை விட கவி உயரமானவன் கவியும், பாலனும் உயரத்தில் சமமானவர்கள், நீலனை விட பாலன் உயரம் குறைந்தவன் இவர்களில் உயரம் கூடியவர் யார்?
1) நீலன் 2) வரன் 3) பாலன்

(06) பேருந்து, கார், லொறி ஆகியன 120km தூரம் செல்வதற்கு ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டன அவை புறப்பட்ட நேரங்களும் கதிகளும் கீழே தரப்பட்டுள்ளன

| வாகனம் | நேரம் | கதி(மணிக்கு) |
|---|---|---|
| பேருந்து | மு.ப.6.30 | 40km |
| கார் | மு.ப.7.00 | 60km |
| லொறி | மு.ப.6.00 | 30km |

38. அவை சேர வேண்டிய இடத்தை என்ன ஒழுங்கில் அடைந்துள்ளன?
1) கார், பேருந்து, லொறி
2) பேருந்து, கார், லொறி
3) லொறி, கார், பேருந்து

(07) முதலில் தரப்பட்ட உருவுடன் பொருத்துகின்ற சொற்கள் அடங்கிய விடையை தெரிந்து கோடிடுக

39. 

1) நிறுத்தல் - வெப்பம் - உருளை
2) மழை - மில்லிமீற்றர் - அளத்தல்
3) மில்லிலீற்றர் - குடுவை - காற்று

நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01.2 | 02.1 | 03.2 | 04.2 | 05.1 | 06.3 | 07.3 | 08.3 |
| 09.2 | 10.3 | 11.3 | 12.2 | 13.1 | 14.3 | 15.3 | 16.3 |
| 17.2 | 18.2 | 19.1 | 20.2 | 21.3 | 22.3 | 23.2 | 24.3 |
| 25.3 | 26.1 | 27.2 | 28.3 | 29.1.வரன் | 2.2 | 30.2 | 31.3 |
| 32.1 | 33.2 | 34.25 | 35.பருந்து | 36.கலைக்களஞ்சியம் | | 37.2 | 38.1 |

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**




## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு


எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க


(01) 1ஆம், 2ஆம் வினாக்களில் குறைந்த தொடர்புள்ள உருச்சோடிகள் இருக்கும் அடைப்பை தெரிவு செய்க

01. 

02. 

(02) முதலில் தரப்பட்ட இரு வடிவங்களையும் கொண்டு அமைக்கப்பட்ட உருவை தெரிக

03. 

04. 


05.

| கிழங்குகள் | B | தானியங்கள் |
|---|---|---|
| மரவள்ளி | அன்னாசி | நெல் |
| A | வாழை | குரக்கன் |

A யிற்கும் B யிற்கும் பொருத்தமான சொற்சோடியை தெரிக
1) கரட், கொய்யா
2) வற்றாளை, பழங்கள்
3) வெண்...., மாம்பழம்

06. உறுமும், முககாரமிடும், ஊளையிடும் தரப்பட்ட ... ஒலி மாபகளை உடைய பிராணிகள் முறையே?
1) புலி, எருது, நரி
2) கரடி, எருமை, ஓநாய்
3) சிங்கம், குதிரை, நரி

07. உருவில் உள்ள சிறிய சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளம் 1cm ஆகும் நிழற்றப்பட்டுள்ள உருவின் பரப்பளவு யாது?



1) 10சதுரcm
2) 8சதுர cm
3) 9சதுரcm

08. நாளை ஒட்டுச் சித்திரத்திற்கு தேவையான பொருட்களை கொண்டு வருமாறு பாலனுக்கு சொல்லவும் இது
1) தகவல்களை வழங்குதல் 2) தகவல்களை பெறுதல் 3) தகவல்களை பரிமாறுதல்

09. ஏப்ரல் மாதம் முதலாம் திகதி புதன்கிழமையாகும் இந்த மாதத்தில் உள்ள செவ்வாய்க்கிழமைகளினதும் புதன்கிழமைகளினதும் எண்ணிக்கை முறையே
1) 5,5 2) 4,5 3) 4,4



10. மிக உறுதியானது என்பதை குறிக்க பொருத்தமான உவமை எது?
1) பொன்னொளி போன்றது 2) பஞ்சு போன்றது 3) இரும்பு போன்றது

11. Cow - bat - top = cap என அமையுமாயின் tap - hen - sea = .......... எவ்வாறு அமையும்
1) ten 2) tea 3) Two

12. கரப்பந்தாட்ட அணி ஒன்றில் உள்ள ஆறு வீரர்கள் தமக்கிடையே மாறிமாறி கைகுலுக்கிக் கொண்டார்கள் எனின் அங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்கள் எத்தனை?
1) 15
2) 30
3) 24

| | | | | |
|---|---|---|---|---|
| ✪ | ✲ | ✡ | # | 15 |
| ✡ | # | ✡ | ✪ | ? |
| 7 | 8 | 8 | 5 | |

13. ? இக்குறி இடப்பட்ட இடத்திற்கு வர வேண்டிய எண் யாது?
1) 16 2) 11 3) 13


14. 
கடிகாரம் காட்டும் நேரத்தை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் விதத்தை காட்டும் கடிகார முகத்தை தெரிவு செய்க



15. சரியான வாக்கிய அமைப்பை கொண்ட விடையை தெரிவு செய்க
1) பத்திரிகை பிரதான இடத்தை வகிக்கிறது செய்திகளை வெளியிடுவதில்
2) பிரதான பத்திரிகை செய்திகளை வெளியிடுவதில் இடத்தை வகிக்கிறது
3) செய்திகளை வெளியிடுவதில் பத்திரிகை பிரதான இடத்தை வகிக்கிறது

16.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 4 | 9 | 16 | ..... |

புள்ளிக்கோடிடப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய விடையை தெரிக
1) 25 2) 21 3) 27




17. இந்த செவ்வக அட்டையில் இருந்து ஒருபக்க நீளம் 3cm அளவுடைய எத்தனை சதுரங்களை பெற முடியும்
1) 18 2) 12 3) 1


18. நேற்று வானம் கறுப்பாக இருந்து மழை பெய்தது. இன்று மாலை வானம் கறுப்பாக இருக்கிறது ஆகவே இன்று மழை
1) பெய்யும் 2) பெய்யாது 3) கூறமுடியாது


19. இடைவெளிக்கு வரவேண்டிய சொற்களை தெரிவு செய்க
.............. பெற்ற இசைக்கலைஞர் தனது மாணவனுக்கு எல்லா........ சொல்லிக் கொடுத்தார்
1) அருமைபெருமை, அபிநயங்களும்
2) பேரும்புகழும், இராகங்களையும்
3) சீரும்சிறப்பும், மொழிகளையும்


20. | 3, 6, 8 | ஆகிய மூன்று இலக்கங்களையும் பயன்படுத்தி ஒன்றுக்கொன்று வித்தியாசமான எத்தனை எண்களை உருவாக்க முடியும்?
1) 6
2) 4
3) 8



(03) சில பழங்களின் விலைகள் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது








21. மாம்பழம் ஒன்றின் விலை யாது? 1) 30.00 2) 35.00 3) 40.00

22. அன்னாசி ஒன்றின் விலை யாது? 1) 60.00 2) 75.00 3) 50.00

(04) மிகவும் நெருங்கிய தொடர்புடைய சொற்களை கொண்ட விடையை தெரிக

23. 1) அழகு - சோலை 2) இரதம் - கலப்பை 3) கடல் - பரவை

24. 1) அளி - வண்டு 2) சுந்தரம் - மகிழ்ச்சி 3) தொன்மை - அருகில்

25. | 8, 11, 14, A, 20, 23, 26, 29, B |

A யிற்கும், Bக்கும் பொருத்தமான எண்களை தெரிவு செய்க?
1) 18,31 2) 17,35 3) 17,32

26. சரியான ஏறுவரிசையில் அமைந்த விடையை தெரிவு செய்க?
1) 9,13,14,19,15,16,1 2) 5,9,11,13,19,20 3) 16,14,12,9,7,3

27. பண்ணை ஒன்றில் ஆடுகளும் கோழிகளுமாக 35 பிராணிகள் உள்ளன அவற்றின் கால்களின் மொத்த எண்ணிக்கை 94 ஆகும் பண்ணையில் உள்ள ஆடுகள் எத்தனை?
1) 12 2) 16 3) 23

28. ஈசல்கள் மின்குமிழ் வெளிச்சத்தை சுற்றிப்பறந்தன இது
1) மழை பெய்வதற்கான அறிகுறி
2) புயற்காற்று வீசுவதற்கான அறிகுறி
3) சுனாமி பேரலைக்கான அறிகுறி

(05) தடித்த எழுத்தில் எழுதப்பட்ட சொற்களுக்கு பொருந்துகின்ற சொல் வரிசையை தெரிந்து அதன் கீழ் கோடிடுக


29. யானை ஆற்றங்கரையை நோக்கி ஆடிஅசைந்து சென்றது
1) வேகமாக 2) அமைதியாக 3) மெதுவாக

30. நாம் பெரியவர்களுடன் ஏட்டிக்கு போட்டியாக நடந்து கொள்ளக்கூடாது
1) விதண்டாவாதமாக 2) பொறாமையாக 3) கீழ்த்தரமாக

31. 1தொடக்கம் 20 வரையான எண்களில் உள்ள இரட்டை எண்களின் கூட்டுத்தொகை யாது?
1) 118 2) 110 3) 105

32. எனது வயது 10 வருடங்கள் எனது தங்கை என்னை விட 4 வருடங்கள் இளையவள் தங்கையின் வயதை விட எனது அப்பாவின் வயது எட்டு மடங்கு கூடியது எனின் அப்பாவின் வயது யாது?
1) 48வருடங்கள்
2) 36வருடங்கள்
3) 42வருடங்கள்

33. முதலிரு படங்களினதும் தொடர்பினை அவதானித்து மூன்றாவது படத்திற்கு பொருத்தமாக அமைய வேண்டிய உருவை தெரிவு செய்க



# கொக்குளாய் மக்கள் காணியில் புத்தர்சிலை அமைக்கும் நடவடிக்கை

## வடமாகாண சபை உறுப்பினர் கண்டனம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கொக்கிளாயில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணியில் சட்ட விரோதமான முறையில் விகாரை அமைக்கப் பட்டு வருகின்றது. பொது மக்களின் தகவலையடுத்து நேற்றுமுன்தினம் காலை சம்பவ இடத் திற்குச் சென்ற வடமாகா ணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இதை நேரில் உறுதிப் படுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு கொக்கிளாய் வைத்தியசாலைக் காணியின் ஒரு பகுதியையும் ,தமிழ் மக்க ளுக்குச் சொந்தமான காணிகளை யும் பாதை ஒன்றையும் அப கரித்து பிக்கு ஒருவரால் படையினர் துணையுடன் இந்த அத்துமீறல் முன்னெடுக்கப்பட் டுள்ளதாக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்

பொது மக்களின் தகவலை யடுத்து நேற்று முன்தினம் காலை கொக்கிளாய் சென்றி ருந்தேன். விகாரை அமைக்கப்படும் காணிக்குச் சொந்தமானவர்க ளில் ஒருவருடனும் ஆவணங்க ளுடனும் குறித்த இடத்திற்குச் சென்றபோது 20 க்கும் அதிக மான படையினர் விகாரை கட்டும் பணிகளில் ஈடுபட்டிருந்த தைக் காணக்கூடியதாக இருந் தது. பிக்குவுடன் உரையாட வேண்டும் என நான் கேட்ட போது பிக்கு அங்கில்லை என தெரிவித்தனர்.உடனே படையி னரிடம் குறித்த ஆவணங்க ளைக் காட்டி ,இவ்விடம் தனியார் காணி என்றும் அங்கு இவ்வாறான நடவடிக்கை மேற் கொள்வது சட்டவிரோதம் என்றும் கூறினேன்.

அங்கிருந்த படையினர் ,தாம் தம்முடைய உயர் அதிகாரியின் பணிப்பின் பேரிலே அங்கே வந்துள்ளோம் என்றும் தமக்கு ஏதும் தெரியாது என்றும் தெரி வித்தனர். மேலும் பிக்கு கொழும்பு சென்றிருப்பதாக கூறி விட்டு விகாரையின் கட்டு மான பணிகளைத் தொடர்ந்தனர்.

சட்டவிரோதமான முறையில் படையினர் துணையுடன் ஒரு மதகுரு இவ்வாறு அத்துமீறு வது இங்கு சாதாரணமாகி விட்டது. இது மதவாதத்தின் உச்சக்கட்டமாகும். இது குறித்து உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதாக மக்களிடம் தெரிவித்தேன்.என்று தெரிவித் தார். (160)

## ஸ்ரீ ஜெய நீராவியடி வீரகத்தியானின் 8 ஆம் நாள் திருவிழா



நலம் தரும் நாயகனே! விக்கின விநாயகனே!
எங்கள் குறைகள் எல்லாம் போக்கிடும் நாயகனே
சங்கரனின் திருமகனே! சர்வலோக நாயகனே
ஐந்து கரத்தோனே ஆனைமுகத்தோனே!
உன்பாதம் சரணடைந்தோம்-காத்திடுவாய்!
கலியுகத்தின் விந்தைகளை காணவே!
அனுதினமும் எலியின் மீது வலம் வந்தாய் கணநாதா
தரணியின் துன்பங்களை போக்கிடுவாய் கஜராஜா!






## ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய வரலாற்றுக் குறிப்புக்கள்

கர்ணபரம்பரைச் செய்திக ளின்படி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் இந்திய காரைக்காலில் இருந்து வேதாரணியம் வழியாக நீராவிப் பகுதியில் குடியேறிய பெரும் நிலக்கிழாரும் வணிகருமான பூதர் என்பவரால் ஸ்தாபிக்கப் பட்டது.

அவர் வரும் போது நமது குலதெய்வமான திருமறைக்காடு இராவணனைக் கொன்றதனால் ஸ்ரீ இராமபிரானைப் பீடித்த பிரமகத்தியை உதைத்து நீக்கிய வீரகத்தி விநாயகரையும் தம் முடன் கொணர்ந்து தமது இல லத்திற்குப் பக்கத்தில் மண்குடி சையில் ஸ்தாபித்தார்.

ஒல்லாந்தர் அரசில் திறைசேரி தலைவராக இருந்த பூதரின் மகன் பூலோகமுதலியார் தனதும் தனது பிறசந்ததியினரதும் ஊர்ப் பொது மக்களினதும் ஆன மலாபம் கருதி தனது குல குரு மார்களான வேதாரண்யக் குருக்களை வேதாரண்யத்தில் இருந்து வரவழைத்து தமது வீட்டின் பக்கத்தில் அவர்கள் வசிக்கக் காணி கொடுத்து அவர் களை நன்கு பராமரித்து வந்தார்.

அவருக்குப் பின் அவர் பௌத்திரன் சிவகுருநாத முத லியாராலும் அவருக்குப் பின் ஆங்கில அரசில் கச்சேரியில் சிறாப்பராக கடமை ஆற்றிய GATE MUDALIAR (இராசவா சல்) இரகுநாத முதலி யாராலும் இவ் ஆலயம் பராமரிக்கப் பட்டது. இவர் காலத்தில் ஓலை யால் வேயப்பட்ட ஆலயம் தீக் கிரையாக அவர் செங்கட்டி களாலும் சுண்ணாம்பாலும் இவ் ஆலயத்தை கட்டுவித்தார்.

அவருக்குப் பின் அவர் மகன் சம்பந்தநாத முதலியாராலும் அவருக்குப் பின் அவர் மக்க ளாலும் இவ் ஆலயம் பராமரிக்க ப்பட்டது. அம் மக்கள் காலத்தில் இவ் ஆலயத்தின் கருவறை அர்த்த மண்டபம் சண்டேஸ்வரர் சந்நிதி என்பன வெள்ளைக் கற்க ளால் கட்டப்பட்டன.

கடைசி மகன் இராமநாத முதலியாரின் மகன் சம்பந்தநாதர் ஆலயத்திற்கு மணிக்கோபுரம் அமைப்பித்தார் இரண்டாவது மகன் இரகுநாத முதலியார் மகன (சம்பந்தநாதருடைய ஒன்று விட்ட சகோதரி) செல்லம்மா வைத்திலிங் கம் ஆலயப் பொறுப்பை ஏற்ற தும் தமது காணி சுமார் ஐம்பது பரப்பை ஆலயத்துக்கே கொடுத்து விட்டார். அவர் விருப்பை நிறை வேற்று அக்காணிகளேவிற்று நீராவிப் பிள்ளையாருக்கு அழ கிய சொக்கட்டான் மண்டபம் திரு வாசி மண்டபம் வசந்த மண்டபம், ஐந்து நிலை இராஜகோபுரம், சுற்று மண்டபங்கள் என்பன கட்டப் பட்டன.

செல்லம்மாவின் தம்பியார் சம்பந்தநாதரால் ஆரம்பிக் கப்பட்ட அலங்காரத் திரு விழா இன்று அவர் மருமகனின் இரகு நாதன முதலியார் காலத் தில் கொடிமரம் தேர் என்பன அமைக் கப்பட்டு மகோற்சவமாக வளர்ந் துள்ளது.


## வாழ்க வளமுடன்

ஸ்ரீ

சிறாரின் பெயர் :- ....................................

முகவரி :- ....................................

பிறந்த ஆண்டு :- ....................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்


## போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை

இளைஞர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையா வதை தடுப்பதற்கான செயற் றிட்டமொன்றை சுகாதார அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இளமைக் காலத்தில் பல் வேறு திறமைகளை மேம்படுத்து வதன் ஊடாக, இளைஞர்கள் போதைப்பொருள் பாவனையி லிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியுமென சுகாதார அமைச்சின் மனநல பிரிவின் பணிப்பாளரும், விசேட வைத் திய நிபுணருமான ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி கூறினார்.

இதுதொடர்பில் தயாரிக்கப் பட்டுள்ள கொள்கையை நாடா ளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதற் கான அனுமதியை பெற்றுக் கொள்ள உள்ளதாக அவர் தெரி வித்தார். இளவயதில் ஏற்படும் போதைப்பொருள் பழக்கம், குற்றச்செயல்களுக்கு தூண்டுத லாக இருப்பதாகவும் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி மேலும் குறிப் பிட்டார்.

## முரசின் இன்றைய பலன்

(30.05.2015 சனிக்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 16ஆம் திகதி.
துவாதசி - திதி. மரணயோகம். கரிநாள்.
சித்திரை நட்சத்திரம் பி.ப.04.26 வரை. பின் சுவாதி.
இராகுகாலம் 08.52-10.22 வரை சுபநேரம் 02.52-04.22 வரை.



ஜோதிட வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களில் ஒரு கண் வைத்திருங்கள்

**ரிஷபம்** — சமயோசித புத்தியினால் வரவிருந்த விபத்து விலகிவிடல்

**மிதுனம்** — பழுதான உணவினால்ஒவ்வாமை ஏற்பட்டு தேகநலம் பாதிக்கப் படல்

**கடகம்** — சொத்துசம்பந்தமாக சகோ தரர் மத்தியில் களேபரம் உருவாதல்

**சிம்மம்** — அசையும் அசையாச் சொத் துக்களினால் வீண் விரயம் ஏற்படும்

**கன்னி** — உற்றார் உறவினர் வருகை யினால் வீண் பிரச்சினைகள் தோன்றல்

**துலாம்** — வேலைப்பளு கூழயதால் தேக நலம் பாதிக்கப்படல்

**விருச்சிகம்** — வருமானத்தின் ஒரு பகுதி தான தர்மங்களுக்குச் செல்லுதல்

**தனுசு** — மார்புச் சளி நோய் தொடர்ந்து வருவதனால் குணமடைய தெய் வதலத்தை நாடுதல்

**மகரம்** — அரசு வழியில் உதவிகளும் நண் பர்களினால் ஆதரவும் உண்டு.

**கும்பம்** — புதிய ஒப்பந்தங்களில் மனத்தை வைக்காது புறந்தள்ளி விடுங் கள்.

**மீனம்** — பிதாவின் தேக சௌக்கியம் எதிர்பாராது பாதிக்கப்படல்

# மோடி அரசுக்கு எதிராக பிரசாரம் மாணவர் அமைப்பிற்கு தடை விதிப்பு


பிரதமர் மோடி மற்றும் இந்து மதத்தினருக்கு எதிராக வெறுப்புப் பிரசாரம் மேற்கொண்டதாக மாணவர் அமைப்பு ஒன்றுக்கு ஐ.ஐ.டி. சென்னை தடை விதித்துள்ளது.

சென்னை ஐ.ஐ.டி.யின் ஒரு பிரிவு மாணவர்கள் இணைந்து அம்பேத்கார்-பெரியார் ஸ்டிசென்டர் (ஏபிஎஸ்சி) என்ற அமைப்பினை இயக்கி வருகின்றனர். இந்த அமைப்பு மீது அண்மையில் பெயர் குறிப்பிடாத சிலர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டில் ஏபிஎஸ்சி இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மத்திய அரசின் கொள்கைகளை அவதூறாக விமர்சித்தும், பிரதமர் மோடிக்கும், இந்து மதத்தினருக்கு எதிராக வெறுப்புப் பிரசாரம் செய்கின்றனர். எனவே அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கடந்த 15ஆம் திகதியன்று மத்திய மனித வள மேம்பாட்டுத்துறை இணைச் செயலர் பிரிஸ்கா மேத்யூ சென்னை ஐ.ஐ.டி தலைமைக்கு விளக்கம் கோரி கடிதம் அனுப்பியுள்ளார்.

தற்போது மத்திய அரசு விளக்கம் கோரி அனுப்பிய கடிதத்தை சுட்டிக்காட்டி சென்னை ஐ.ஐ.டி தலைவர், ஏ.பி.எஸ்.சி அமைப்புக்கு தடைவிதித்து உத்தரவிட்டுள்ளார். ஏ.பி.எஸ்.சி அமைப்பின் மீதான தடை குறித்து, ஐ.ஐ.டி மாணவர்கள் பிரிவு தலைவர் சிவகுமார் எம்.ஸ்ரீனிவாசன் கூறுகையில், ஏ.பி.எஸ்.சி அமைப்பு மீது தடைவிதிக்கப்பட்டது குறித்து கடந்த 22 ஆம் திகதியே மின்னஞ்சல் மூலம் எனக்குத் தெரிய வந்தது.

ஏ.பி.எஸ்.சி உறுப்பினர்கள் மாணவர்கள் அமைப்புக்கான



சட்டதிட்டத்தை கடைபிடிக்க தவறியுள்ள்ளனர் என்று தெரிவித்துள்ளார். ஏ.பி.எஸ்.சி உறுப்பினர் கூறுகையில், எங்கள் அமைப்பின் மீது தடை உத்தரவு பாய்ந்துள்ளது குறிப்பிட்ட அந்த மின்னஞ்சல் வரும்வரை எங்களுக்குத் தெரியாது. மேலும், எங்களிடம் எவ்விதமான விளக்கமும் கோரப்படவில்லை எனக் கூறியுள்ளார்.

# மலேசியாவின் வனப்பகுதியில் 139 அகதிகளின் உடல்கள் மீட்பு

மலேசிய வனப்பகுதியில் 139 அகதிகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. புத்த மதத்தினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட மியான்மாரில், சிறுபான்மை ரோஹிஞ்சா முஸ்லிம்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த நாட்டில் நடைபெற்ற மதக் கலவரங்களில் நூற்றுக்கணக்கான ரோஹிஞ்சா முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

இதனால், மியன்மாரிலிருந்து தப்பி, முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள மலேசியா, இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் தஞ்சமடையும் நோக்கில் ஏராளமான ரோஹிஞ்சா முஸ்லிம்கள் கடல் வழியாக வருகின்றனர்.

ஆட் கடத்தல் கும்பல் மூலம் அழைத்துச் செல்லப்படும் அவர்கள், மலேசியாவின் அடர்ந்த வனப்பகுதியில் தங்கவைக்கப்பட்டு பின்னர் நகருக்குள் சட்டவிரோதமாக குடியேற்றம் செய்யப்படுகின்றனர். அந்த வகையில் மலேசியாவின் புகிட் வாங் பர்மா, பெரில்ஸ் வனப்பகுதியில் சுமார் 28 முகாம்கள் செயற்பட்டுள்ளன.

அவற்றை நடத்தியவர்கள் தப்பியோடிவிட்டனர். முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான அகதிகள் பசி, நோயால் உயிரிழந்துள்ளனர். அவர்கள் வனப்பகுதிகளில் ஆங்காங்கே புதைக்கப்பட்டுள்ளனர். சம்பவ பகுதியை மலேசிய அதிரடிப் படை பொலிஸார் அண்மையில் கண்டு பிடித்தனர்.

அப்பகுதிகளில் இருந்து இது வரை 139 அகதிகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்தத் தகவலை மலேசிய உட்துறை இணை அமைச்சர் வான் ஜுனைதி துங்கு ஜாபர் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

# நைஜீரிய தற்கொலைப் படையில் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

ஆப்பிரிக்காவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள நாடான நைஜீரியா, போகோஹறம் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கி பெரும் இன்னலுற்று வருகிறது. சாட், நைஜர் மற்றும் கேமரூன் நாடுகளிலும் இந்த தீவிரவாதிகள் காலூன்றி இருந்தாலும், நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியை தங்கள் ஆதிக்க பூமியாக கொண்டு உள்ளனர். இங்கு தற் கொலையில் ஈடுபடும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நைஜீரியாவின் பல பகுதிகளில் தாக்குதல் நடத்தி வரும் இவர்கள், தங்கள் தீவிரவாத பணிகளுக்காக பெண்கள், குழந்தைகளை அடிக்கடி கடத்திச்செல்லும் நிகழ்வுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் போர்னோ மாநிலத்தின் சிபோக் பகுதியில் உள்ள பள்ளிக்கூடத்தில் இருந்து கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கூட 200 பெண் குழந்தைகளை கடத்திச்சென்றது உலக அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த குழந்தைகளை மீட்க முடியாமல் நைஜீரிய இராணுவமும், பாதுகாப்பு படையினரும் திணறி வருகின்றனர்.

இந்த தீவிரவாதிகளின் முகாம்கள் மீது கடந்த மாதம் இராணுவம் நடத்திய அதிரடி தாக்குதலில், பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்பட சுமார் 300 பேர் மீட்கப்பட்டனர். எனினும் சிபோக் பள்ளிக்குழந்தைகளை இன்னும் மீட்க முடியவில்லை.

# தேயிலை தோட்டத்தில் சிறுவனின் தலை துண்டிப்பு

அஸ்ஸாமில் உள்ள தேயிலைத் தோட்டம் ஒன்றில் 5 வயது சிறுவனின் தலை துண்டித்து கொலை செய்யப்பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அஸ்ஸாம் மாநிலம் சோனிட்புர் மாவட்டத்தில் உள்ள ராமபுரா பகுதியில் இருக்கும் தரஜுலி தேயிலை தோட்டத்தில் வசித்து வரும் நானுமிர்தா என்பவர் ஒரு மந்திரவாதி என்று உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் அவர் அப்பகுதியில் வசிக்கும் 5 வயதுச் சிறுவனை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று தலை துண்டித்து கொலை செய்துள்ளார்.

இதையடுத்து அக்கம்பக்கத்தினர் வந்து நானுவை வீட்டில் இருந்து வெளியே இழுத்து வந்து அடித்து நொறுக்கி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸார் இது குறித்து கூறுகையில், நானுவின் வீட்டில் இருந்து 4 வீடுகள் தள்ளி தான் சிறுவனின் வீடு உள்ளது. சிறுவனின் தந்தைக்கும், நானுக்கும் இடையே பிரச்சினை உள்ளது. எனவே நானு அந்த சிறுவனை நரபலி கொடுத்திருக்கக்கூடும். மேலும், சிறுவனின் உடலுக்கு அருகில் அவரது வீட்டில் சில சாமி சிலைகள், பூஜைக்குரிய பொருட்கள் இருந்தது என்று தெரிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# உலகின் முதலாவது கொலை மண்டையோடு கண்டுபிடிப்பு



மனிதர்களின் தோற்றம் மற்றும் பண்புகள் குறித்து ஆய்வு செய்யும் நிபுணர்கள் ஸ்பெயினில் வடக்கு பகுதியில் உள்ள சிமா டிலோஸ் ஹியூசஸ் பகுதியில் பூமியைத் தோண்டி ஆய்வு மேற்கொண்டார். அப்போது மண்ணில் புதைந்து கிடந்த ஒரு குகைக்குள் 28 பேரின் எலும்புக் கூடுகள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

அவற்றை பரிசோதனை செய்ததில் அவர்கள் 4 இலட்சத்து 30 ஆயிரம் ஆண்டுக்கு முன்பு இறந்தவர்கள் என தெரிய வந்தது. அவற்றில் ஒரு மண்டை ஓட்டில் கடுமையாக தாக்கி அதன் மூலம் உயிர் பிரிந்ததற்கான அடையாளம் இருந்தது. எனவே இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இவரே உலகில் முதலாவதாக கொலை செய்யப்பட்டவராக இருக்கலாம் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**கலைப்பீடம்**

**இரண்டாம் அரையாண்டு மீள்பரீட்சைகள் - 2013**

**(பழைய பாடத்திட்டம்)**

**கல்வியாண்டு 2012/2013**

கலைமாணிப்பட்ட முதலாம், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருட மாணவர்களின் மேற்படி இரண்டாம் அரையாண்டு மீள் பரீட்சைகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் 01.06.2015 திகதி முதல் 10.06.2015 திகதி வரை கலைப் பீடாதிபதி அலுவலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாட அலகிற்கு மீள் பரீட்சைக் கட்டணமாக ரூபா 50/- வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையிலோ செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல்வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ளவும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C/3867)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை,**

**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு.**

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2012**

**01. கலை முதற் தேர்வு - 2012**
**02. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - i - 2012**
**03. பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - ii - 2012**
**04. சிறப்புக் கலைமாணி பகுதி - iii - 2012**

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 300/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை, வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 300/- இற்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 70/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 20x20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 17.07.2015 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

**குறிப்பு:** கலைமாணிக் கற்கை நெறி தொடர்பாக, கல்வியாண்டு 2011/2012 இருந்து அரையாண்டு பருவ அடிப்படையிலான கற்கைக்கால அளவுப்பெறுமதியிடப் பட்ட கற்கை அலகு முறைமை (Semester based course unitsystem and grade point Average evaluatlon) அறிமுகப்படுத்தப்படவிருப்பதால், ஏற்கனவே கலைமாணிக் கற்கை நெறிக்கு பழைய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்கள், மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து, விரைவில் தங்கள் கற்கை நெறிகளை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதகி விபரங்களைப் பெறவிரும்புவோர் 021 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்,
29.05.2015 (C/3868)

# துன்னாலை இராமச்சந்திரன் மாயம் எமக்கு எந்த சம்பந்தமும் இல்லை

## உண்மையை அறிய டக்ளஸ் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தனது புதல்வர் காணாமற்போனதற்கும் ஈ.பி.டி.பி.யினருக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக, அண்மையில் இணையத்தளமொன்றில் துன்னாலை கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த ஒரு தம்பதியினர் கூறியிருந்தனர். இக்கருத்துக்கள் எவராலும் தூண்டப்பட்ட நிலையில் எமக்கு எதிராக முன்வைக்கப்பட்ட கருத்துக்களா அல்லது அறியாமை காரணமாக முன்வைக்கப்பட்ட கருத்துக்களா என்பது எமக்குத் தெரியாது. எனினும், இக்கருத்துக்களில் எவ்வித உண்மையும் கிடையாது.

எனவே இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து, உண்மையைக் கண்டறிய உதவுமாறு செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும், இராணுவத் தளபதியிடமும் எழுத்துமூலக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதில் துன்னாலை கிழக்கு, கரவெட்டி எனும் விலாசத்தைச் சேர்ந்த செல்லையா சுப்பிரமணியம் மற்றும் திருமதி அம்பிகை சுப்பிரமணியம் ஆகியோர் கடந்த 2015..04.18 ஆம் திகதி 'தேசம்' இணையத்தளத்தில் தெரிவித்திருந்த கருத்துக்களின்படி, இவர்களது புதல்வரான எஸ்.இராமச்சந்திரன் என்பவர் கடந்த 2007.03.15 ஆம் திகதி கலிகச் சந்திப் பகுதியில் வைத்து பிற்பகல் 6.00 மணியளவில் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு, இராணுவ முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும், அங்கு இருந்த ஈ.பி.டி.பி.யினரிடம் இவர்களது புதல்வர் ஒப்படைக்கப்படுவதை பாதையில் இருந்த மக்கள் கண்டதாகவும், அப்போது ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

பின்னர், இரவு 8.00 மணியளவில் இவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, தான் முகாமில் இருப்பதாகவும், பிரச்சினை எதுவுமில்லை எனக் கூறியதாகவும், பின்னர் அவர் வீடு திரும்பாததால் மறுநாள் குறித்த இராணுவ முகாமிற்குச் சென்று பார்த்தபோது, அவர் அங்கு இருக்கவில்லை என்றும் தெரிவித்து, இவர்களது புதல்வரைக் கடத்தியது ஈ.பி.டி.பி.யினரே என்று முறைப்பட்டுள்ளனர்.

எஸ்.இராமச்சந்திரன் கடத்தப்பட்டபோது கையடக்கத் தொலைபேசி, கமரா, தங்கச் சங்கிலி, கடிகாரம் மற்றும் 60,000 ரூபா பணம் என்பன அவர் வசம் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இப்படி ஒரு சம்பவம் இடம்பெற்றமை தொடர்பில் நாம் இதுவரையில் அறிந்திருக்கவில்லை என்பதுடன், எமக்கு இதில் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

எனவே இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து, உரிய நடவடிக்கை எடுத்து, இதன் உண்மை நிலையை பகிரங்கப்படுத்துமாறு தங்களிடம் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்விடயம் தொடர்பில் தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பை நான் பெரிதும் மதிக்கின்றேன் என்று அந்த எழுத்துமூலக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடவுச்சீட்டு மோசடி யாழ். யுவதி கைது

போலி கடவுச்சீட்டு மற்றும் போலி விசாக்கள் ஐம்பதை எடுத்துகொண்டு இங்கிலாந்துக்கு செல்வதற்காக வருகைதந்த இலங்கைப் பெண்ணை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக விமான நிலை குற்றப்புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 22 வயதான யுவதியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் இலங்கை விமான சேவைக்கு சொந்தமான யு.எல். 503 விமானத்தில் இங்கிலாந்துக்கு செல்வதற்காக விமான நிலையத்துக்கு வருகைதந்துள்ளார்.

அவரிடம் போலியான இந்திய கடவுச்சீட்டு மற்றும் அமெரிக்க விசாக்கள் 50 இருந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் அந்த கடவுச்சீட்டு மற்றும் போலியான ஆவணங்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ஒருவரிடமிருந்து பெற்றுகொண்டதாக தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் அவரை நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 20 ஐ எதிர்த்தால் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## ஹெல உறுமய எச்சரிக்கை

(கொழும்பு)

தேர்தல் முறைமாற்றம் அடங்கிய 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை தோற்கடிக்க முயற்சிக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்றுப் பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரும், மேல் மாகாண சபை உறுப்பினருமான நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் முறை மாற்றத்தைக் கொண்டுவரும் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கு தற்போது பலதரப்பிலிருந்து சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

20 ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு தெரிவித்திருந்த போதிலும், அரசாங்கத்திற்கெதிராக அக்கட்சி உறுப்பினர்களால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதுவும் அந்த சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கான திரைமறைவுச் செயற்பாடாகவே அமைவதாக நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க சுட்டிக்காட்டினார்.

அதேவேளை அண்மையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவிற்கும், அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கும் இடையில் ஏற்பட்ட விவாதம் தொடர்பிலும் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க இதன்போது கருத்து வெளியிட்டார்.



அமைச்சரவைக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் செயற்பட்ட விதம் மிகவும் வெறுக்கத்தக்கதென கூறிய அவர், இயலுமானால் பிரசித்த விவாதத்திற்கு வருமாறும் அமைச்சர் ரவூப் ஹக்கீமிற்கு சவால் விடுத்தார்.

## சிறுமி...

வயது சிறுமியே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும், இவர் இரண்டாம் கட்டை றோமன் கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் கல்வி கற்பவர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

நீர் அள்ளுவதற்காக அருகில் உள்ள வீட்டுக் கிணற்றிற்கு சென்றிருந்த நிலையில் அவர் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை முதல் சிறுமியைக் காணாது தேடியபோது, சிறுமி கொண்டு சென்ற கிணற்று வாளி மற்றும் கயிறு என்பன குறித்த கிணற்றில் மிதப்பதனால் சிறுமியும் கிணற்றில் விழுந்திருக்கலாம் என்று உறவினர்கள் சந்தேகம் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழங்க, பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து கிணற்றிலிருந்து சிறுமியின் சடலத்தை மேலே கொண்டு வந்துள்ளனர்.

உயிரிழந்த சிறுமியின் தாய் வெளிநாட்டிற்கு சென்றுள்ளதாகவும், குறித்த சிறுமியும், தம்பியும் சகோதரியின் பராமரிப்பில் உள்ளதாகவும், 19 வயது சகோதரி கணவருடன் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (29)

## மேலதிக...

பகுதியைப் பொறுத்தவரையில் தற்போது ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் அப்பகுதிக்கான தலைமையக பொலிஸ் நிலையமாகச் செயற்பட்டு வரும் நிலையில், நெடுந்தீவில் மாத்திரமே பொலிஸ் நிலையம் உள்ளது.

காரைநகர், நயினாதீவு, குறிகாட்டுவான் மற்றும் மண்டைதீவு ஆகிய பகுதிகளில் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. மக்கள் தங்களது தேவைகள் தொடர்பிலான முறைப்பாடுகளை காவலரண்களில் பதிவு செய்ய முடியாது பெரும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர். அதே நேரம் அண்மித்து பொலிஸ் நிலையங்கள் இல்லாததால் பல பகுதிகள் பல்வேறு சமூகச் சீர்கேடுகள் இடம்பெற வாய்ப்பாக இருக்கின்றன.

கடந்த கால ஆட்சியில் நாம் இந்த விடயத்தை வலியுறுத்தி, இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. மண்டைதீவிலும் காரைநகரிலும் காவலரண்களை நாம் ஏற்படுத்தினோம். எனினும் காரைநகர் காவலரண் பொலிஸ் நிலையமாக மாற்றப்பட வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது. குற்றங்கள் நடப்பதற்கு முன் அவற்றைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்கூட்டியே எடுக்க வேண்டும்.

அதே நேரம், மாதகல் பகுதியில் ஒரு பொலிஸ் நிலையம் அமையப் பெறுவதும் அவசியமாகும். ஏனெனில், இப்பகுதி ஊடாக போதைப் பொருள் கடத்தல் செயற்பாடுகள் பாரியளவில் இடம்பெறுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

பொலிஸ் நிலையங்களில் பொலிஸாரின் எண்ணிக்கையும் பற்றாக்குறைவாக இருப்பதாக தொடர்ந்தும் கூறப்படுகின்றது. எனவே, எமது பகுதி மக்களுடன் உணர்வுப்பூர்வமாக ஒத்துழைத்து செயலாற்றக்கூடிய பொலிஸார் போதியளவில் நியமிக்கப்பட வேண்டும் எனவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் ஐந்து...

அமைச்சர், பண்டு பண்டாரநாயக்க - பொது நிர்வாக மற்றும் ஜனநாயக நிர்வாகம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர், ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய சுற்றாடல் துறை இராஜாங்க அமைச்சர், ஹேமல் குணசேகர - வீடு மற்றும் சமுர்த்தி இராஜாங்க அமைசசர், சந்திரசிறி சூரியாராச்சி - காணி பிரதியமைச்சர்.

## இலங்கை...

அங்கு நின்ற சந்தேகத்திற்குரிய படகினை சென்று சோதனை செய்தபோது அதில் இலங்கை மீனவர்கள் இருப்பது தெரியவந்தது.

இந்திய கடலோர காவல் படையினர் விசாரணைகளை மேற்கொண்டு சிங்லி, மாது, சுஜித் பாண்டே, மகேஷ்குமார், லாஜினோர் ரோமேஷ் ஆகிய ஐந்து இலங்கை மீனவர்களை கைதுசெய்து காரைக்கால் மார்க் துறைமுகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

அங்கிருந்து வேதாரண்யம் அழைத்து வரப்பட்டு அங்குள்ள இந்திய கடலோர காவல் படையினரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் எல்லை தாண்டி வந்த இலங்கை மீனவர்கள் 5 பேரையும் வேதாரண்யம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டதை அடுத்து 5 இலங்கை மீனவர்கள் சென்னை புழல் சிறைக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீவகத்தில்...

நிலையம் அங்கு அமைக்க நாம் நடவடிக்கை எடுப்போம். பொலிஸ் காவலரண் அமைப்பதால் மக்களின் சேவைகளைச் செய்ய முடியாது.

பொலிஸ் நிலையமே தீவகப் பகுதியில் அமைக்கப்படவேண்டும். காரைநகரில் இவ்வாறு காணி தர மக்கள் முன்வந்துள்ளனர். கடந்த 19 ஆம் திகதி இவ்வாறு புங்குடுதீவில் பொலிஸ் நிலையம் அமைக்க மக்களுடன் கலந்தாலோசித்த வேளையிலேயே சமாதானத்தை குழப்புகின்ற சிறு குழுவினர் சீர்குலைவை ஏற்படுத்தினர்.

இங்கு 4 ஆயிரம் பேர்வரையில் வாழ்கின்றனர். இவ்வாறான சர்குலைவை ஏற்படுத்தும் சிறு குழுக்களை கட்டுப்படுத்தினால் நாம் அங்கு பொலிஸ் நிலையம் அமைத்து மக்களுக்கு சேவை செய்ய தயாராக இருக்கிறோம். நாங்கள் மக்களுக்கு சேவை செய்ய மாத்திரமே இருக்கிறோம். மக்களுக்கு இடையூறு விளைவிக்க அல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## நோர்வே...

சேர்ந்த நீரியல் நிபுணர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் வந்தடைந்த நோர்வே நிபுணர்கள் நொதேண்பவர் மின் நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளையும் சென்று பார்வையிட்டுள்ளனர். அத்தோடு, சுன்னாகம் பிரதேச ஆய்வுகளில் ஈடுபட்டிருக்கும் வடமாகாண சபையால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவைச் சேர்ந்தவர்களையும், கைத்தொழில தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தைச் சேர்ந்தவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இவற்றையடுத்தே தமது அவதானிப்புகளைத் தெரிவிக்கும் முகமாக விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனை சந்தித்துள்ளனர்.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நிலத்தடிப் படிவுகள் தொடர்பான ஆய்வுகளின் முடிவுகள் விரைவில் வெளியிடப்படவுள்ளது. மேலும், இதன் அடிப்படையில் மண்பரிசோதனைகள் நொதேண்பவர் மின் நிலையத்தை அண்டி ஆழ்துளையிட்டு மேற்கொள்ளப்படும். இம்முடிவுகள் வெளியான பின்பு நோர்வே நிபுணர்குழு தமது ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் விவசாய அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன், மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி சோ.சண்முகானந்தன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள்.

# நீதிமன்றத்தாக்குதல் வழக்கில் அநாவசியமாக எவரும் கைதாகவில்லை

## வடக்கு பொலிஸ் மா அதிபர் சொல்கிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்ற சூழலில் இடம்பெற்ற அசம்பாவிதத்தின் போது கைது செய்யப்பட்ட அனைவரும் அமைதியை குலைக்கும் வகையில் கலகம் ஏற்படுத்தியவர்களே. இதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர்.

இதற்கான தீர்வை நீதிமன்றமே வழங்கவேண்டும் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

அந்த இடத்திற்கு வந்த அனைவரும் கலகம் விளைவிக்க வந்தவர்களே. வெறுமனே சாப்பிட, தண்ணீர் எடுக்க, கடைக்கு வந்ததாகச் சொல்வது தவறானது. சட்டவிரோதமாக கூடிய கூட்டத்திற்கு வந்த அனைவரும் கலகக்காரர்களே பாடசாலை மாணவர் என்று கூறினால் அவர்கள் இவ்வாறான நிகழ்வில் கலந்து கொள்வது தவறு. அதுவும் சீருடை இல்லாமல் சாதாரண உடையில் இருந்துள்ளனர். இந்தியர் ஒருவரும், அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மைதான். இவர்களுக்கான தீர்வை பொலிஸார் தரமாட்டார்கள். நீதிமன்றமே தரவேண்டும் ஆனாலும் இவர்களுக்கான தீர்வு ஒரு சாதாரண தீர்வாக இருக்கும் என நம்புகின்றேன்.

அன்று பொலிஸார் கலகம் விளைவித்தவர்களை மட்டும்தான கைது செய்தனர். என்பது உண்மை. இதற்கு சான்றாக ஊடகவியலாளர்கள் இருக்கின்றார்கள். நீங்கள் கடமையின் நிமிர்த்தம். அங்கு நின்ற போதிலும் உங்களை பொலிஸார் கைது செய்யவும் இல்லை. இடையூறு வழங்கவும் இல்லை. இது ஒரு சான்று.

இதேவேளை யாழ்.நகரப் பகுதியில் படிப்படியாக பாதுகாப்பு கடமையிலுள்ள பொலிஸ உத்தியோகத்தர்கள் விலக்கப்படுவர். தற்போது இயல்பு நிலை திரும்பியிருக்கின்றது. நீதிமன்ற தவணை நிறைவடையும் திகதிக்குப் பின்னர் இவர்கள் முற்றாக நீக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்தது டன்,

இலங்கைச் சட்டத்தில் இல்லாத ஆதிகாலத்தில் இருந்த காட்டுச் சட்டத்தை கையிலெடுத்து தாங்களே தீர்ப்பு வழங்குவதை சட்டத்தின் பால் ஏற்றுக் கொள்ளமுடியாது. இதற்கு இங்கு நீதிமன்றம் இருக்கின்றது. அதன் மூலம் குற்றம் இழைத்தவர்களுக்கான தீர்ப்பு கட்டாயம் கிடைக்கும்.

அதை விடுத்து ஆதிகால காட்டுச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள இடமளிக்கமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ,25)

# சஜித் மீது முறைப்பாடு தொழிற் சங்கம் போர்க்கொடி

(கொழும்பு)

சமுர்த்தி விவகார, வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கு எதிராக, மனித உரிமை ஆணைக்குழுவில் நான்கு முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன.

சமுர்த்தி நிதியை அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்துவது, சமுர்த்தி திட்டத்தை சீர்குலைப்பது, சமுர்த்தி உத்தியோகத்தர்களுககு ஊழியர் நம்பிக்கை நிதி செலுத்தாமை, வாக்களித்தபடி சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படாமை உள்ளிட்ட காரணங்களை வைத்தே மேற்படி முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேசிய சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கம் இம்முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

# சரத் என் சில்வா மீது நிதியமைச்சர் பாய்ச்சல்

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, அவர் வகித்த பதவிக்கு பொருத்தமற்ற வகையில் செயற்பட்டு வருவதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஹெல்பின் அம்பாந்தோட்டை சம்பவம் தொடர்பில் அன்று கடும் விமர்சனங்களை முன்வைத்த முன்னாள் பிரதம நீதியரசர் தற்போது அந்த நிலைப்பாட்டில் இருந்து மாறியுள்ளார்.

இது மிகவும் ஆச்சரியமாகவுள்ளது. முன்னாள் பிரதம நீதியரசருக்கு சட்டத்தை பற்றி தெரியும், ஆனால் பொருளாதாரத்தை பற்றி தெரியாது. தெரியாத ஒன்றை பற்றி பேசுவதன் மூலம் இல்லாத பிரச்சினைகளே ஏற்படும் எனவும் நிதியமைச்சர் கூறியுள்ளார்.

# பிரதமர் பதவி வகிக்க ரணிலுக்கு உரிமையில்லை

## ஜே.வி.பி.போர்க்கொடி

(கொழும்பு)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அப்பதவியை தொடர்ந்தும் வகிப்பதற்கான உரிமையை இழந்துவிட்டாரென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஆங்கில ஊடகமொன்றுக்கு நேற்று வழங்கிய நேர்காணலில் ஜே.வி.பியின் தலைவரும், தேசிய நிறைவேற்றுச் சபையின் உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்ட காலாவதியாகி விட்ட நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பதவியும் நிறைவுபெற்றுவிட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று, தற்போதைய நாடாளுமன்றம் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக பதவியில் இருந்து வருவதாகவும், ஆகவே உடனடியாக அது கலைக்கப்பட்டு, பொதுத் தேர்தல் நடத்தப்படுவதன் ஊடாக புதிய நாடாளுமன்றம் உருவாக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை 100 நாள் வேலைத்திட்டத்தில் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு அமைய உருவாக்கப்பட்ட தேசிய நிறைவேற்றுச் சபை கடந்த மாதம் கூடவில்லை என தெரிவிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க, இனிவரும் காலங்களில் அந்த சபையில் அங்கம் வகிக்கப்போவதில்லை என்ற முடிவுக்கு வந்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# பொன்சேகாவுக்கு எம்.பி. பதவி மனுவை விசாரிக்க ஏற்பாடு

(கொழும்பு)

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பிரதம நீதியரசரிடம் சமர்ப்பிப்பதற்கு உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது.

சரத் பொன்சேகாவுக்கு பதிலாக நாடாளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட ஜயந்த கெட்டகொடவை அகற்றுமாறு கோரி, சேனக்க ஹரிப்பிரிய டி சில்வா இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

மனு மீதான விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதிகள் குழாமிலிருந்து புவனேக அலுவிகார தனிப்பட்ட காரணங்களுக்காக விலகிக் கொண்டுள்ளார்.

மனுதாரரான சேனக ஹரிப்பிரிய டி சில்வா மனு தாக்கல் செய்வதற்கு சட்டரீதியாக முடியாது என பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் நாயகம் விராஜ் தயாரத்ன அடிப்படை ஆட்சேபனையை முன்வைத்து சுட்டிக் காட்டினார்.

அடிப்படை ஆட்சேபனை குறித்து நீதிபதிகள் குழாமில் ஏனைய இரண்டு நீதிபதிகளும் வெவ்வேறு கருத்துக்களை கொண்டிருந்தமையால் மனு மீதான விசாரணையை முன்னெடுப்பதற்கு வேறு நீதிபதிகள் குழாத்தை நியமிக்கும்படி பிரதம நீதியரசரிடம் கோருவதாக தீர்மானித்தனர்.

இதனடிப்படையில், வேறு ஒரு நீதிபதிகள் குழாம் முன்னிலையில் அடுத்த மாதம் 15 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

# மொழிப்பிரச்சினைக்கு தீர்வுகாண பொலிஸ் சேவையில் இணையுங்கள்

## தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)



மொழிப்பிரச்சினைக்கு தீர்வுகாண பொலிஸ் சேவையில் தமிழ் இளைஞர், யுவதிகளை இணைவதற்கு முன்வருவதன் மூலம் சரியான சேவையினை தமிழ் மக்கள் அனுபவிக்கமுடியும் என வடமாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் லலித் ஏ.ஜெயசிங்க தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களை நேற்று சந்தித்தவேளையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். முன்னர் இவ்வாறு பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தவேளை 800 பேர் வரை தெரிவு செய்யப்பட்டு சேவையில் ஈடுபட்டுள்ளனர். எனினும் பிரதம பொலிஸ் நிலையங்களில் 30 பேர் வரையிலும் சாதாரண பொலிஸ் நிலையங்களில் சராசரியாக 10 பேர் வரையிலும் உள்ளனர்.

நீதிமன்ற கடமைகள், முறைப்பாடுகளின் பதிவுகள் என பல்வேறு கடமைகளை இவர்கள் மூலம் மேற்கொள்ள முடியாத நிலையில் தற்போது தமிழ் உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் பெண் கொஸ்தாபல்களுக்கான விண்ணப்பங்கள் வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான நேர்முகத்தேர்வுகள இடம்பெற்றுள்ளபோதிலும் சேவையில் மேலும் ஆட்களை இணைத்துக்கொள்ள விண்ணப்ப முடிவுத்திகதி 15.05.2015 ஆக நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இளைஞர், யுவதிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது ஊடகங்களே.

உயர்கல்வியை கற்றவர்கள் இச்சேவையில் இணைந்து சேவை செய்ய வேண்டும். வடமாகாணத்திலேயே சேவையை மேற்கொள்ளக்கூடிய வகையில் இந்த ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது. இதற்கு ஊடகங்கள் எமக்கு ஒத்தாசை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பொதுத்தேர்தலை தாமதப்படுத்த சதி நடக்கிறதா?

(கொழும்பு)

20 ஆம் திருத்தச்சட்டத்தைக் காரணமாக வைத்து சிலர் நாடாளுமன்றத் தேர்தலை தாமதித்து வருவதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சுமத்துகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

20 ஆம் திருத்தச்சட்டத்தை சமர்ப்பிப்பதற்கு, திருத்தச்சட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு இடையில் இதுவரையில் இணக்கம் ஏற்பட்டதை காண முடியவில்லை என்றும் கூறினார்.

இந்நிலையில், பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வர முயற்சித்து வருவதன் மூலம், சதித் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுவது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

20 ஆம் திருத்தச் சட்டம் மற்றும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பவற்றின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியை அச்சுறுத்த முடியாது எனவும் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் அது சகலருக்கும் தெளிவாகி



விடும் என்றும் அவர் கூறினார்.

அத்துடன், தற்போது நடைமுறையில் உள்ள நாடாளுமன்றமானது, ஜனவரி 8 ஆம் திகதி மக்களினால் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமையவான நாடாளுமன்றம் அல்ல எனவும், இதனால், நாடாளுமன்றத்தை உடனடியாக கலைத்து பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் எனவும் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.